தப 9516

ஓம்

சரவண பவாய நம

திருக்கோணமலை

# அருள் மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோவில்

# மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்.



தொகுப்பாசிரியர்:
சைவப் புலவர் - பண்டிதர்
திரு. இ. வடிவேல் அவர்கள்
திருக்கோணமலை.

வெளியிடுவோர்;
திரு. இ. ஸ்ரீதரன் அவர்கள்
ஆதீன கர்த்தா.
திருக்கோணமலை.

255-32
ஸ்ரீத்து
SL/PR

ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம்
திருக்கோணமலை,

25-4-1983.



ஸ்ரீ முத்துக்குமார சுவாமி
ஆலயத்தின் முன்னைநாள் தோற்றம்

ஓம்
சரவண பவாய நம

திருக்கோணமலை

# அருள் மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோவில்

# மகா கும்பாபிஷேகச் சிறப்புமலர்.



தொகுப்பாசிரியர்;

சைவப் புலவர் - பண்டிதர்
**திரு. இ. வடிவேல் அவர்கள்**
திருக்கோணமலை.

★

வெளியிடுவோர்:

**திரு. இ. ஸ்ரீதரன் அவர்கள்**
ஆதீன கர்த்தா.

★

ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம்
திருக்கோணமலை, — 25-4-1983.

# பொருளடக்கம்.


1. முகவுரை — தொகுப்பாசிரியர்

2. வாழ்த்துரை — சிவஸ்ரீ கு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள்

3. ஆசியுரை—சிவஸ்ரீ பூரண - சண்முகரெட்டினக் குருக்கள் ,,

4. ஆலய வரலாறு—சைவப் புலவர்-பண்டிதர் இ. வடிவேல் ,,

5. முத்துக்குமாரசுவாமி ஊஞ்சல் —
திரு. த. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்.

6. எச்சரிக்கை - பராக்கு-லாலி - மங்களம் —
பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்

7. முத்துக்குமாரசுவாமி வெண்பா —
திரு. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள்

8. அருள்பொலிக-சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ,,

சிவனே குகன் குகனே சிவன்—
9. பிரமஸ்ரீ கு. சண்முகரத்ன சர்மா ,,

10. என் கடன் பணிசெய்து கிடப்பதே—திரு. இ. ஸ்ரீதரன் ,,

11, எங்கள் குலதெய்வம் — திரு. சி. சிவானந்தம் ,,

12. நன்றியுரை — திரு. இ. ஸ்ரீதரன் அவர்கள்

13, கந்தரனுபூதி — அருணகிரிநாத சுவாமிகள்

14. கந்தரலங்காரம்— ,, ,, ,,

15, கந்தர் கலி வெண்பா—ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள்

16. கந்த சஷ்டி கவசம் ,, ,, ,,

17. சண்முக கவசம்—பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்

18. திருமுருகாற்றுப்படை — நக்கீரதேவர்

19, ஆறுபடை விட்டுத் திருப்புகழ் ஆறு.




ஓம் குகாய நம

# முகவுரை.

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக் கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே.

தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரத்தை மத்திய பேருட் தலமாகக் கொண்டு அருள் பரப்பும் ஆலயங்கள் பல திருக்கோணமலையில் இருக்கின்றன, ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' என்று திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத்தில் இக்கருத்தை உட்பொருளாகக் கொண்டார் போலும்.

திருக்கோணமலை ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவிலுக்கு இன்று (25–4–1983) மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. விஞ்ஞான உலகில் சஞ்சரிக்கும் இக்கால மக்கள் அபிஷேகம், அர்ச்சனைகளின் அர்த்தமறிய ஆசைப்படுவது ஆச்சரியமானதொன்றல்ல. அறிவியல் உலகத்திற்கு இவை தேவைப்படுகின்றது.

ஈரப்பதமுள்ள காற்று மண்டலத்தில் பிராணவாயுவின் அழுத்தம் அதிகரிக்கின்றது. இதனால் பிராணவாயுவின் மூலக் கூறுகள் அதிக அளவில் கிடைக்கின்றன. ஒத்த அதிர்வுள்ள ஒலியலைகள் காற்று மண்டலத்தில் எதிர் மின்னூட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இந்த மூலக் கூறுகள் உடல், உள வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. இவை விஞ்ஞானம்.

நமது முன்னோர் உடலையும், உள்ளத்தையும் சீராக்கி உயிர்வளர்க்கும் பணியை ஆலயங்களைக் கொண்டே உருவாக்கினார்கள். தண்ணீர், எண்ணெய், பால், தயிர், தேன், நெய், விபூதி போன்ற பொருட்களைக் கொண்டு அபிஷேகங்கள் செய்வதாலும், யாகங்களினாலும், கர்ப்பக் கிரகத்துள்ளும், ஆலயத்திலும் பிராண வாயுவின் மூலக் கூறுகளை அதிகரிக்கச் செய்து அவைகளைக்காற்று மண்டலத்தில் பரவச் செய்தார்கள். ''ஓம்'' என்ற பிரணவத்தையும், வேதமந்திரங்களையும், திருமுறைகளையும்

அர்ச்சனையால் ஒலிக்கச் செய்து அதனாலெழும் ஒத்ததிர்வு ஒலியலைகளைக் காற்றில் பரவச் செய்தார்கள். இவைகளின் மூலம் நுண்ணிதாக்கப்பட்ட பிராணக் கூறுகளும், நாதக் கூறுகளும் ஆலயத்தில் குழுமியுள்ள பக்தர்களை அடைகின்றன. அவர்களுடைய உள்ளத்திற்கும், உடலுக்கும் இதனால் நன்மை விளையுமென்பது விந்தையல்ல. விஞ்ஞானம் கண்ட உண்மை.

ஆலயத்திலுள்ள கருவறை ஒத்ததிர்வுக் கலமாகவும், மூல விக்கிரகம் ஒலியலைகளின் எதிரொலிப் பிம்பமாகவும், மூலவிக்கிரகத்தின் கீழேயுள்ள யந்திரத் தகடு ஆற்றலைச் சேமிக்கும் கலமாகவும், சந்நிதானத்திலுள்ள காற்று மண்டலம் ஆற்றலைக் கடத்தும் பாதை யாகவும், விளங்குகின்றது. அங்கே வழிபடுவோர் ஆற்றலை ஏற்பவராக விளங்குகின்றனர். இது நம்முன்னோர் கண்டறிந்த விஞ்ஞான மெய்ஞானம். எனவே இந்து சமயத்தின் ஆலய வழிபாடு விஞ்ஞானப் பாதையில் மெய்ஞானத்தைப் படைக்கும் சிறந்த சாதனம் என்பது தெளிவு.

இதனையுணர்ந்தே நித்திய, நைமித்திக கருமங்களும், மகாகும்பாபிஷேகங்களும், யாகங்களும் ஆலயங்களில் நடைபெற்று வருகின்றன. அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோவில் மகா கும்பாபிஷேகத்தின் ஞாபகார்த்தமாக ஒரு நூலை வெளியிட வேண்டுமென்பது ஆலய தர்ம கர்த்தாவின் ஆசை. கால, தேச, வர்த்தமானத்தை மனதிற் கொண்டு இச் சிறு நூல் வெளியிடப்படுகின்றது. ஆலய தர்மகர்த்தாவின் சார்பில் தற்போது ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வரும் முகாமையாளர், திரு. சிவசேகரம் சிவானந்தமவர்கள் நூல் வெளியிடும் பணியை என்னிடம் தந்து வழியும் காட்டினார்கள். அவர்காட்டிய நெறியில் நின்று என் சிற்றறிவுக்கெட்டிய பிரகாரம் கோணேசப் பெருமானருளால் இப்பணியைத் தொடங்கினேன். அப்பனருள் பெற்றுச் சுப்பனுக்குத் தொண்டாற்றக் கிடைத்த வாய்ப்பை நினைத்து மகிழ்ச்சியுடன் நன்றி கூறுகின்றேன்;

நூல்களை வெளியிடுவது சிம்ம சொப்பனமாயுள்ள இக் காலத்தில் ஆலய தர்ம கர்த்தாவாகிய திரு. இ. ஸ்ரீதரனவர்கள் நன்னோக்கத்தோடு இந் நூலை வெளியிடுவது போற்றுதலுக்குரியது. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பதுபோல.



இது சிறிய நூலாயிருந்த போதிலும் இதனுள்ளே ஆறு நூல்கள் முழுமையாகத் தரப்பட்டிருக்கின்றன. எல்லோராலும் எளிதில் பெற்றுக்கொள்ள முடியாததும், முருக பக்தர்களுக்கு மிக வேண்டியதுமான கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தசஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா, சண்முக கவசம் திருமுருகாற்றுப்படை என்னும் ஆறு நூல்களையும் மாக கும்பாபிஷேக ஞாபகார்த்தமாக வெளியிடும் இந்த நூலில் முழுமையாகச் சேர்த்துள்ளோம். முருகனுடைய ஆறு படைவீடுகளுக்கு முரிய ஆறு திருப்புகழ்களும் இந் நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆசியுரைகளும் ஆலய வரலாறுகளும், முத்துக் குமாரப் பெருமானுக்குரிய பழமையான பாடல்களும், சிவாச்சாரியர்களின் சிறப்புரைகளும், ஆலய தர்மகர்த்தா, முகாமையாளருடைய அனுபவக் கட்டுரைகளும், முத்துக் குமாரப் பெருமானுடைய படங்களும் பிறவற்றையும் காண வாருங்களென்று அடியார்களையும், வாசகர்களையும் அன்புடனும், பணிவுடனும் வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வது என்பணி. இந் நூலிலுள்ளே ஆரார் உங்களோடு பேசுகின்றார்கள் என்பதை அறிய முற்படுவது உங்கள் பணி. அதற்காக ஒரு நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள். என் பணியிலேற்படும் தவறுகளையும் மன்னிக்க வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

சைவப் புலவர் - பண்டிதர்
இ. வடிவேல்
திருக்கோணமலை

ஓம்

# திருக்கோணமலை ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவில் குடமுழுக்கு விழா.

## வாழ்த்துரை

சிவஸ்ரீ. சு. கு. சோமாஸ்கந்த ஐயர், ஆதீன கர்த்தா
ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோவில்
திருக்கோணமலை.

சிவாகமங்களில் கூறப்படும் கிரியைகளுள் மிக மிக முக்கியமானதும், அருளுக்கு அடிப்படையானதும் கும்பாபிஷேகக் கிரியையாகும். மக்கள் அவரவர் நலங் கருதித் தமது வாழ்க்கையில் செய்துகொள்வன சாந்திக் கிரியைகள். அங்ஙனமின்றி எல்லா ஜீவராசிகளுக்கும் நலமுண்டாதற் பொருட்டுச் செய்யப் பெறுவது ''பெருஞ் சாந்தி'' என்னும் கும்பாபிஷேகம். திருக்கோயில்களில் நிகழும் நித்திய வழிபாடு, இடையீடின்றித் தரிசிக்க அமைவது, நைமித்திக வழிபாடுகள் எப்போதேனும் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் நிகழ்த்தப் பெறுவனவாய், அவ்வச் காலங்களில் மட்டும் தரிசிப்பதற்குக் கிடைப்பனவாய் இருக்கும். பெருஞ் சாந்தியாகிய கும்பாபிஷேகமோ ஒவ்வொரு கோவிலிலும் பல ஆண்டுகளுக்கு ஒருமுறையே நிகழ்த்தப் பெறுவதாய்த் தரிசனத்துக்கு அருமையுடையதாய் அமைவது.

கும்பாபிஷேகம் என்பது ''குடத்து நீரை ஆட்டுதல்'' என்னும் பொருளையுடையது. இறைவன் நடத்த வடிவங் கொண்டு உயிர்களுக்கு அருள்செய்ய முற்படும்போது மண், நீர், தீ, காற்று, வான், திங்கள், கதிரவன், உயிர் ஆகிய இடங்களை நிலைக்களங்களாகக் கொண்டு எழுந்தருளியிருப்பான். இவற்றையே நமது அருள் நூல்கள் அட்டமூர்த்தம் என்று சொல்லும். எங்கும் நிறைந்திருப்பது இறைவன் இயல்பாயினும் மேற்கண்ட எட்டுப் பொருட்களில் மட்டும் அவனது அருள் வெளிப்பாடு எளிமையாக உண்டாகும். இந்தப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டே திருக்கோவில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்று வருகின்றது.



எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைத் திருக்கோவிலிலும், திருவுருவத்திலும் வெளிப்பட்டு நின்று அருள் செய்யுமாறு வேண்டிக்கொள்ளும் அடிப்படையில் கும்பாபிஷேகக் கிரியை முழுவதும் அமைந்துள்ளது. மிருத்சங்கிரகணம் முதலாகக் கும்பாபிஷேகம் வரை உள்ள எல்லாக் கிரியைகளும் அட்டமூர்த்த வடிவமாயுள்ள ஆண்டவனை விளக்கமடையும் வண்ணம் வேண்டி, மந்திர பூர்வமாக ஏற்பட்ட விளக்கங்களைக் கும்பத்திலுள்ள புனித நீரில் சேர்ப்பித்து, அந்த அருள்நீரைத் திருமுழுக்கு ஆட்டுவதனால் இறைவனது பரிபூரணமான நல்லருள் திருவுருவத்திலும், திருக்கோவிலிலும் நிலைபெற்றிருந்து இன்பத்தை வழங்கும்.

இங்ஙனம் மிக உயர்ந்த தத்துவ அடிப்படைகள் பலவற்றைக் கொண்டு நிகழ்த்தப்பெறும் கும்பாபிஷேக விதி சிவாகமங்களில் சிவபெருமானாலேயே அருளிச்செய்யப்பெற்றுள்ளன. சைவாலயங்கள் அனைத்திலும் சிவாகம விதிப்படி சிவதிட்சை நிறைவால் தகுதிபெற்ற சிவாச்சாரியர்களைக் கொண்டு நித்திய, நைமித்திகங்கள் முறைப்படி நிகழவும் விதிப்படி பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகம் நடைபெற்று அனைத்துயிர்களுக்கும் அருள் நலம் வாய்க்கவும் பரமகருணாநிதியாகிய ஸ்ரீ முத்துக்குமாரப் பெருமான் அருள் புரிவாராக, குடமுழுக்கு விழாக்கண்டு அனைத்துயிர்களும் சீரும் திருவும் பெற்றுச் சிறப்புடன் வாழ்க.



முத்துக்குமரா! சரணம்

"சிவாச்சார்ய சிரோரத்னம்"

## பூரண சண்முகரத்தினக் குருக்கள்,

ஆலய பிரதம குரு.

திருக்கோணமலை,

## ஆசியுரை.

இக் கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக கலியுக வரதனாக விளங்குகின்றார் முருகப்பெருமான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தன்னை உள்ளன்புடன் பாடிப் பரவும் பக்தர்களுக்கு பலவிதமான பேறுகளையும் அளித்துக் கருணைபுரியும் கடவுளல்லவா முத்துக்குமாரப் பெருமான்.

இவருக்குக் "குமாரன்" என்றும் ஒரு திரு நாமமுண்டு குமார என்றால் என்றும் இளைஞன் (கு—பூமி,மார-மன்மதன்) அதாவது பூமியில் மன்மதன் போன்ற பேரழகு வாய்ந்தவன் என்றும், (குச்சித: - மார: யே நவஸ; என்று அன்மொழித் தொகையாகக் கொண்டால்) மன்மதனையேபழிக்கும் அழகு பெற்றவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

சூரபத்மன் என்னும் அசுரனால் துன்புற்ற தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிச் சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாய்த் தோன்றிச் சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகளாய்க் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டார்.சரவணப் பொய்கையில் உண்டானமையால் "சரவணபவன்" என்றும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையால் "கார்த்திகேயன்" என்றும் பெயர் பெறுகின்றார். இவ்வாறு சரவணப் பொய்கையில் அவதரித்ததை,

"அருவமுமுருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

என்று கச்சியப்பர் அழகாகக் கூறுகின்றார்.



மேலும் கங்கையினால் இவர் சுமக்கப்பட்டமையினாலே "காங்கேயன்" எனவும் இவருக்கு ஒரு திருநாமமுண்டு. இவர் சூரபத்மனோடு போர் புரியும்போது ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அடக்கித் தன் சக்தியின் கீழ் ஆண்ட சூரபத்மன் முதலில் குமரனைக் கண்டதும், "இவன் ஒரு சிறு குழந்தைதானே!" என எண்ணி அலட்சியமாகப் போர் செய்தான். அப்போது இறைவன் அவன்மீது இரங்கி விசுவரூப தரிசனங் காட்டிச் சிறிது நல்லுணர்வையும் நல்கினார். அவ்வாறு நல்லுணர்வு பெற்ற சூரன் தனது அறியாமையினையும் "அஹம்" நான் என்ற செருக்கையும் நினைந்து மிக்க கழிவிரக்கம் கொண்டானாயினும், பின்னர் பழைய நிலை பெற்று அகங்கார ரூபனாக மாறிப் போர்செய்து முடிவில வேலாற் பிளவுபட்டு ஒரு பகுதி சேவலும்,மறுபகுதி மயிலுமாக மாறக் கொடியாகவும் வாகனமாகவும் பெரும் பேறு பெற்றான். சேவலைக்கொடியிற் கொண்டமையால் "சேவற் கொடியோன்" குக்குடத்துவஜன் எனவும், மயிலை வாகனமாகக் கொண்டமையால் "மயூரவாகனன்" எனவும் பெயர் பெற்றார். மேலும் பரமனுக்கு பிரணவத்தை உபதேசித்துச் "சுவாமிநாதன்" - "சிவகுரு" வாகவும் மாறினார். என்றும் இளமை - அழகு - ஒளி - நறுமணம் – தெய்வீகம் ஆகிய தன்மைகள் குறைவிலாது நிரம்பப் பெற்றிருப்பதனால் முருகு-முருகன் என்றும் பெயருடையவனாகி, அன்போடு தன்னை முருகா என்று ஒரு கால் நினைத்து அழைப்பார் முன்னே இருகாலும் தோன்ற அருள் புரியும் தெய்வமல்லவா முத்துக்குமார சுவாமியார்.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்ததும் தக்ஷிண கைலாசம் எனப் புகழ் பெற்றதும். திருஞானசம்பந்தப் பெருமானாரின் பதிகப் பாடல் பெற்ற திருத்தலமுமான திருகோணமலைப் பதியிலே சிறப்புடன் விளங்கும் முத்துக்குமார சுவாமி கோயிலில் முருகப் பெருமான் முத்துக்குமரனாக - செல்வ முத்துக்குமாரனாக - வீற்றிருந்து அருள் புரிகின்றார்."

இவ்வாறு கண்கண்ட தெய்வமாகவும் - கருணைக்கடலாகவும் விளங்கும் முத்துக்குமார சுவாமியாருக்குக் கும்பாபிஷேகம் நிகழும் புனித நாளிலே - அடியார்கள் அனைவரும் முத்துக்குமாரப் பெருமானின் பாத கமலங்களை வணங்கி அவனருளால் சகல நலன்களும் பெற எமது மனமார்ந்த ஆசிகள் உரியதாகுக.

ஓம்

திருக்கோணமலை

# ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவில்

# வரலாறு.

சைவப் புலவர் - பண்டிதர்

**இ. வடிவேல் அவர்கள்**

**திருக்கோணமலை.**

ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவில் திருக்கோணமலைப் பட்டணத்தில் திருஞானசம்பந்தர் வீதியில் இருக்கின்றது. திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. இவ்வாலயத்திற்குக் கிழக்கே பிரசித்திபெற்ற ஸ்ரீ பத்திரகாளிஅம்பாள் ஆலயமும், வடக்கே விஸ்வநாத சுவாமி (சிவன்) கோவிலும் அமைந்து சைவத் தமிழ்மக்கள் நெருக்கமாய் வாழும் இடத்திலிருந்த போதிலும், இவ்வாலயத்திற்குச் சமீபமாக இஸ்லாமியப் பள்ளிவாசல் ஒன்றும் காணப்படுகின்றது. பள்ளிவாசலையண்டி நெருக்கமாய் வாழும் இஸ்லாமியமக்களும் முத்துக்குமாரசுவாமி கோவிலில் பற்றும், பக்தியுமுடையவர்களாய் வாழ்ந்து வருகின்றார்கள்.

முத்துக்குமாரசுவாமி என்பது முருகனுடைய திருநாமங்களிலொன்று. இத்தலம் நெடுங்காலமாக முருக வழிபாட்டுத்தலமாகவே இருந்துவருகின்றது. நித்திய, நைமித்திககருமங்கள் யாவும் குமாரப் பெருமானுக் குரியவையாகவே நடைபெற்று வருகின்றது. ஆனால் கருவறையில் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இதுபற்றித் தற்போது முகாமையாளராயிருக்கும் திரு சி, சிவானந்தம் அவர்களை விசாரித்தபோது இவ்வாலயத்தின் பழைய வரலாறுகள் கிடைத்தன.

தற்போதுள்ள ஆலயத்தைக் கட்டுவதற்கு முன், சுமார் கி. பி. 1800 ஆம் ஆண்டளவில் அந்த இடம் ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்து வந்திருக்கின்றது. சடையர் என்னும் பண்டார சாது ஒருவர் அவ்விடத்தில் ஒரு சிறு குடிசைக் கோவில் கட்டி வேல் ஒன்றை வைத்து வழிபட்டுவந்தார். அந்த வேலும் அவ்விடத்திலேயே வாட்குளியிலிருந்து கிடைக்கப்பெற்றதாக



அறியக்கிடக் கின்றது. அந்தச் சாதுவுக்குப் பின் திரு. செல்லையாபிள்ளை என்பவர் அக் குடிசைக் கோவிலைச் சற்றுப் பெரிதாகக் கட்டி அந்த வேலைவைத்து வழிபாடு செய்து வந்தார். அக்காலத்தில் வாழ்ந்த திரு. மு. சண்முகம்பிள்ளை என்பவர், சிறந்த முருகபக்தன். செல்லையாபிள்ளையின் மறைவுக்குப் பின் அவர் அந்தவேலை வழிபட்டு ஆதரித்து வந்தார். அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த ஒரு சந்நியாசி காசியிலிருந்து கொண்டு வந்த சிவலிங்கமொன்றைத் திரு. மு. சண்முகம்பிள்ளையிடம் கொடுத்து "நீ வழிபட்டு வரும் ஆலயத்தில் இந்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்" என்று வேண்டிக்கொண்டார். வேண்டுகோளை மறுக்க முடியாமல் ஏற்றுக்கொண்ட சண்முகம் பிள்ளையவர்களுக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது. நானோ முருகவழிபாடு செய்பவன். சந்நியாசியோ லிங்கத்தைத் தந்து பிரதிஷ்டை செய்யும்படி அருளாணையிடுகின்றார். இவ்வாறு கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். இறைவன் அவருடைய கனவில் தோன்றி. இந்த லிங்கத்தை ஏற்றுக்கொண்ட உனக்கு இஷ்ட சித்திகளெல்லாம் கிடைக்கவிருக்குக்கின்றன லிங்கத்தை ஸ்தாபிப்பதற்குரிய மூலஸ்தானம் இதுதானென்றும், மற்றும் பரிவார மூர்த்திகள் அமையவேண்டிய இடங்களையும், தீர்த்தக்கேணி அமையவேண்டிய இடம் முதலானவற்றையும் இறைவன் அவருக்குக் காட்டிக் கொடுத்தாராம். அடுத்தநாள் காலையில் அவ்விடத்திற்குப் போய்ப் பார்த்தபோது கனவில் கண்ட அடையாளங்கள் யாவும் பிரத்தியட்சமாகவும் சரியாகவுமிருந்தன. இறைவனுடைய பெருங் கருணையை நினைந்து பரவசமடைந்த சண்முகம்பிள்ளையவர்கள் கனவில் தனக்கு இறைவன் காட்டிய பிரகாரம் ஆலயத் திருப்பணி வேலைகளைத் தொடங்கினார். திருப்பணிவேலைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கும் போது தீர்த்தக் கிணற்றையும் வெட்டுவித்தார். திருப்பணிவேலைகள் ஓரளவு பூரணமடைந்திருந்தாலும் மூர்த்திகளுக்கும், மற்றுமுள்ள தேவைகளுக்கும் பணமில்லாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஒருநாள் இறைவன் கனவில் தோன்றித் தீர்த்தக் கிணற்றை இன்னும் ஆழமாக வெட்டும்படி கூறினாராம் மேலும் கிணற்றை ஆழமாக அகழ்ந்தபோது ஆழத்தில் திரவியங்கள் கிடைக்கப் பெற்றன,

அந்தப் பெருநிதியத்தினால் மூர்த்திகளும், மூர்த்திகளுக்குரிய சர்வாபரணங்களும் செய்வித்துக் காசியிலிருந்து சந்நியாசியாரால் கொண்டுவரப்பட்ட லிங்கத்தை ஸ்தாபித்து அந்த லிங்கத்துடன் வேலையும் பிரதிஷ்டை செய்து கி. பி. 1889 ஆம் ஆண்டு ஆனிமாதம் பத்தாந் திகதி மகா கும்பாபிஷேகத்தைச் செய்வித்தார். சண்முகம்பிள்ளையவர்

களுடைய காலத்திற்குப் பின் அவருடைய மருகர் திரு. அம்பலவாணரும் அவருக்குபின் அவருடைய மருகர் திரு. நவரெட்ணம் அவர்களும் முத்துக்குமாரசுவாமி கோவிலைப் பராபரித்து வந்தார்கள். முன்னைய இருவருக்கும் ஆண் சந்ததி இல்லாததால் மருமக்கள் ஆலயத்தைப் பராபரித்தனர் திரு. நவரத்தினத்திற்கு இறைவன் ஆண் சந்ததியை அனுக்கிரகித்தார். அதனால் திரு. நவரத்தினதிற்குப் பின் அவருடைய மூத்த மகன் திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்கள் ('முன்னாள் திருக்கோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர்') ஆலயப் பராபரிப்புக்கு உரியவரானார். இராஜவரோதயம் சிறுவனாயிருந்ததால் அவர் பொறுப் பேற்கும் வரையும் அன்னாருடைய மாமனார் திரு. செ. லிங்கரெட்டிணம் என்பவர் ஆலயத்தைப் பராபரித்து வந்தார். இவருடைய காலத்தில் கி. பி. 1932ஆம் ஆண்டு (6-4-32) இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்களைப் பலரும் அறிவார்கள். மக்களுக்கும், மகேஸ்வரனுக்கும் தொண்டனாய் வாழ்ந்தவர். இரத்தின இராஜவரோதயம் என்பது அவருடைய முழுப் பெயர், அவர் தன் பெயரைச் சுருக்கி என். ஆர். ராஜவரோதயம் என்று வைத்துக்கொண்டார். இவர் பாராளுமன்ற உறுப்பினராயிருக்குங் காலத்தில் முத்துக்குமாரசுவாமி கோவிலுக்குத் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். 1950 ஆம் ஆண்டு திருக்கோணேசப் பெருமானுடைய பெருங்கருணையால் நிலத்திலிருந்து வெளிப்பட்ட கோணேசர்கோவில் திருவுருவங்களுக்கு ஆலயமெடுக்க வேண்டுமென்று உறுதி பூண்டார், இந்த நோக்கத் திற்காக, திருக்கோணமலை சைவப் பெருமக்களுக்கு வழிகாட்டியாயிருந்த இராஜவரோதயம் அவர்கள் கோணேசப் பெருமானுக்கு ஆலயமெடுத்தபின்பே முத்துக்குமாரசுவாமிகோயில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று சங்கற்பம் செய்து பின்போட்டுவிட்டார். கோணேசப் பெருமானுக்குக் கோவிலெடுத்துக் கும்பாபிஷேகம் செய்வித்த திரு. ந. இ. இராஜவரோதயமவர்கள் மாபெரும் திருப்பணியைச் செய்து நிறைவேற்றிய திருப்தியோடு இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாகி 1963 ஆம் ஆண்டு ஆனி மாதம் இயற்கை எய்திவிட்டார். அவருக்குப்பின் அவருடைய மகன் திரு. இ. ஸ்ரீதரன் ஆலயப் பராபரிப்புக்குரியவரானார். இவர் இளைஞனாயிருந்ததால் திரு. இராஜவரோதயமவர்களுடைய சகோதரி புவனேஸ்வரியின் கணவர் திரு. சி. சிவானந்தமவர்கள் தற்போது ஆலயப் பொறுப்பையேற்று முகாமையாளராயிருந்து நடத்தி வருகின்றார். 1942ஆம் ஆண்டு



முன்னாள் திருக்கோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்கல் 3-4-1963ல் திருக்கோணேசர் ஆலயத்தில் ஆவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக வைபவத்தில் சிவலிங்கத்திற்கு எண்ணெய்க்காப்பு சாத்துகின்றார்.

நடைபெற்ற இரண்டாவது உலக மகாயுத்தத்தில் எல்லாக் கோவில்களும் பூட்டப்பட்டிருந்தன. இந்த ஆலயத்தில் மாத்திரம் தொடர்ந்து பூசைகள் நடைபெற்று வந்தன.

இவ்வாலயத்தில் கருவறையில் லிங்கத்துடன் வெள்ளி மயிலும் தங்கவேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் பிள்ளையாரும், வள்ளி, தெய்வயானை சமேதராக ஸ்ரீமுத்துக்குமார சுவாமியும், தண்டாயுதபாணியும் எழுந்தருளி விக்கிரகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதே மண்டபத்துள் கிழக்குமுகமாக பிள்ளையாருடைய சிலாச்கிரகமும், சண்டேஸ்வரரும் உண்டு. ஸ்தம்ப மண்டபத்தில் மயூரம், பலிபீடம் என்பனவும், வசந்தமண்டபத்தை யடுத்துள்ள யாகசாலைக்கருகில் வைரவருக்குத் தனியாலயமும் இருக்கின்றது. வெளிப்பிரகாரத்தில் நாகதப்பிரானுக்குத் தனிக் கோவிலுண்டு.

ஆலயத்தில் நித்தியப்படி மூன்றுகாலப் பூசைகள் நடைபெற்றுவருகின்றன. வைகாசி விசாகத்தைத் தீர்த்த தினமாகக்கொண்டு பத்துநாட்களுக்கு மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. ரதோற்சவத்திற்கு அடுத்த நாள் ஆலயத் தீர்த்தக் கேணியில் சுவாமி தீர்த்தமாடுவார். கந்த சஷ்டி ஆறு நாட்களும் உள்ளூர், வெளியூர் அடியார்கள் ஆலயத்திலிருந்து விரதமனுட்டிப்பார்கள். மாதந்தோறும் கார்த்திகை விழாவும், திருக்கார்த்திகைக்கு விஷேட விழாவும் நடைபெற்று வருகின்றது. திருவெம்பாவை, தைப் பூசம், சிவராத்திரி என்பன விசேஷமாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

ஆனி உத்தரத்தில் ஆரம்பித்து ஆவணிமாதம் வரையும் கந்தப் புராணப் படிப்பும், கந்தசஷ்டி நாட்களில் மயூரகிரிப் புராணப் படிப்பும் நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்திற்கு பழமையான ஊஞ்சல் பாட்டும், துதிப் பாடல்களும் இருக்கின்றன. உட்பிரகாரத்தில் பிள்ளையாருக்கும், தண்டாயுதபாணிக்கும், நவக்கிரகங்களுக்கும் புதிய கோவில்கள் கட்டி மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து 25-4-83 இல் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

திருக்கோணமலை

# ஸ்ரீ முத்துக்குமார சுவாமி

## திருப் பொன்னூஞ்சல்

★

ஆக்கியோன் :
திரு. த. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்
திருக்கோணமலை.

★

### காப்பு

1, விரிகடல் சூழ் தென்னிலங்கைக் கரையின் மேய
வீங்கு புகழ் திருக்கோணு சலத்தில் வாழும்
கரியவனும் நான்முகனுந் தேடிக் காணு
கண்ணுதலோன் திரு முத்துக் குமாரன் மீது
பெருமகிழ்வி லன்புமிகுந் தூஞ்சல் பாடப்
பேணுபவர்க் கருள் சுரந்தே துன்பம் நீக்குங்
கரடமத கரிமுகங் கொண்டுள்ள வெங்கள்
கணபதிதன் இரு சரணங் காப்பதாமே.

2, சீர்பூத்த திரு மணிமண்டபத்தி னூடே
செம்பவளக் கால் முத்தங் கயிறதாக
ஏர்பூத்த வயிரமணிப் பலகை பூட்டி
இருபுறமும் தேவியர்கள் இனிது மேவப்
பார்பூத்த பல்லுயிரு மினிது வாழ
மண்ணவரும் விண்ணவரும் பாடி யாடக்
கூர் பூத்த வேல்கொடு வெஞ் சூர்முற் கீண்ட
கோணை முத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

3, சோதி நவரத்தின மணி மகுட மின்னச்
சுடர்கொள் நவமணிக் குழைகள் துலங்கி மின்ன
ஏதமிலா வன்பர்களுக் கின்ப மூட்டும்
இலங்கிலை வேல் ஒண்கரத்தி லினிது மேலும்
பீதகப் பன் மணிகளொடு மதாணி யாடப்
பேணுபவர் முகமதனிற் களிநின்றாட
கோதை பசும் பட்டினுடன் பாங்கராடக்
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.



4. வெண்டரளக் கவிகை நிழல் பரந்து மேவ
மெல்லியலார் இருமருங்குங் கவரி வீச
தண்டளவத் தாமநறு வாசம் வீசத்
தகைமைசெறி மறையவர்கள் வேதமோதப்
பண்டமுவி மாகதர்கள் கீதம் பாடப்
பரத நாட்டிய மாதர் நடன மாடக்
கொண்டறவழ் நறைமலர்ப் பூஞ் சோலை சூழ்ந்த
கோணை முத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

5, திருமருவு திருக்கோண மலையில் வாழும்
சீரிய நற் சண்முகமாஞ் செல்வப் பேரோன்
தருமமெனுந் துறையினிறை பொருளிறைக்குந்
தயாளகுண னியற்று திருக் கோயில் தன்னில்
பரவையெழு மோதையென அன்பரார்ப்பப்
பார்த்தவர்கள் கண்களித்துமன மகிழ்ச்சிகூர
குருமருவு சம்பந்தர் பதிகம் பெற்ற
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

6. மரபுநெறி தவறாத மறையோர் மற்றோர்
மாதர்களும் மக்களும் மனமகிழ்ந்து நோக்க
கருமைசெறி யவர்விழி கண் மனத்திரேடுங்
கனக மணிச் சந்நிதிமுன் ஊஞ்சலாட
முருகவிழ் பூங் கழற்றேவி மார்கள் நோக்க
முகமதனிற் புன்முறுவல் கனிந்து தோன்ற
குரைகடல் சூழ் ஈழவள நாட்டின் மேய
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

7. மங்குல் படி சிகரநெடு மிமய மாது
மறைநாலுந் தேடரிய கடவுள் தாமுந்
தங்குமெழிற் துணைவியரோடு ஊஞ்சல் மீது
நயனெழுந் தருளுமியல் மகிழ்ந்து நோக்கப்
பொங்குமதக் கரிமுகத்தோன் புளகமெய்தப்
புரந்தரனும் மாலயனும் போற்றி நிற்கக்
கொங்குலவு மிந்தத் தண்தாமத் திண்தோள்
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்

8, சந்தணமும் சண்பகமு மடர்ந்தே யோங்குந்
தண்பொதியக் குறுமுனிக்குத் தமிழை யோதிக்
கந்தமெறி சோலைவளர் பழனி மேய
கருணைசெறி யறுமுகவா ஆடீரூஞ்சல்

பந்தமற உலையேத்தும் முனிவர் விண்ணோர்
பார்வாழச் சிங்முகத் தவுணன் றன்னைக்
குந்தமொடு முன்றடிந்து வாகை பூண்ட
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்,

9, திங்களொடு கங்கை நறுங் கொன்றை சூடுஞ்
செஞ்சடையோன் றன்புதல்வா ஆடீரூஞ்யல்
சங்கமொடு சக் கரமுந் தாங்கி நின்ற
சலசலோசனன் மருகா வாடீரூஞ்சல்
பொங்கு புகழ் வேதமொரு நான்கு மோதும்
போதனைமுன் றளைபுரந்தோ யாடீரூஞ்சல்
குங்குமமுஞ் சந்தனமும் கமழும் மார்ப
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்

10. செம்பதுமை தருமருகா வாடீரூஞ்சல்
சிவகாமி பாலகரே யாடீரூஞ்சல்
அம்பவள மணிவாயா வாடீரூஞ்சல்
அருள்கரக்குந் திருமுகத்தோ வாடீரூஞ்சல்
வெம்பிறவி தீர்ப்பவரே யாடீரூஞ்சல்
விமலை தெய்வ யானையொடும் ஆடீரூஞ்சல்
கும்பமுனிக் குரைகுருவே யாடீரூஞ்சல்
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

11. ஆறுமுகத்தோடு கரமீராறும் வாழி
அசுரர் குலம் படப் பொருத வேலும் வாழி
வீறுகொள் எண் திக்கிலுஞ்செல் மயிலும் வாழி
விருது நின்று கூவிடுமஞ் சேவல் வாழி
பேறுதரு மஞ்செழுத்து நீறும் வாழி
பெட்புவவு சடாட்சரமும் மறையும் வாழி
கூறு பெருமித வடியா ரென்றும் வாழி
கோணைமுத்துக் குமாரரே வாழி வாழி.

12 கோணமலை புகழ்பரப்பி வாழி வாழி
கொள்ள நல்ல பக்திநெறி வாழி வாழி
ஞாலமெங்குஞ் சிறந்தோங்க வாழி வாழி
வடிவேலா முத்துக் குமரா வாழி வாழி
கானமயில் கொண்டவரே வாழி வாழி
பார்வதியின் பாலகனே வாழி வாழி
கோணைமுத்துக் குமாரரே வாழி வாழி
குறவள்ளி தெய்வானையுடன் வாழி வாழி.



ஸ்ரீ முத்துக்குமாரப் பெருமான் வல்லி தேவசேன சமேத
ராக திருவூஞ்சலில் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கின்றார்

# ஸ்ரீ முத்துக்குமார சுவாமி
# எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்

ஆக்கியோன் - சைவப் புலவர் - பண்டிதர்,
இ. வடிவேல் அவர்கள், திருக்கோணமலை,

## எச்சரிக்கை

1. அருவாய் அருவுருவாய் அருளுருவாய் வருமுருகா
திருமால் தரு மருகா முத்துக்குமரா எச்சரிக்கை

2. ஆதி யந்தமில்லாப் பரஞ் சோதி சிவனாரின்
ஆதி சக்தியான அறு முகவா எச்சரிக்கை

3. இகபோகமும் பரபோகமும் ஈவாய் எச்சரிக்கை
அடமேவினின் றருளும் அறுமுகவா எச்சரிக்கை

4. ஈடேறவே யடியார்க்கருள் ஈவாய் எச்சரிக்கை
பாடல்பெறு கோணைமுத்துக் குமரா எச்சரிக்கை

5 உன்பாதமே தஞ்சமென்று உருகும் அடியாரைக்
கண்பார்த்தருள் செய்யுங் கந்த சுவாமி எச்சரிக்கை

6. ஊனுயி் உயிர்க் குயிராய் உம்பர் கோனுகியுயர்ந்த
கோணைசலம் மேவும் முத்துக் குமரா எச்சரிக்கை

## பராக்கு

1. அருள்பெருகு முத்துக் குமாரா பராக்கு
ஆனைமுகவற் கிளைய அரனே பராக்கு

2. வரமருளு வள்ளிமண வாளா பராக்கு
வந்தனைசெய் யடியார்துயர் தீர்ப்பாய் பராக்கு

3. அவுணர்குலம் அழிய வேல் விடுவாய் பராக்கு
ஆடுமயில் ஏறும் அறுமுகவா பராக்கு

4. சங்கரனுக் குபதேசம் அருள்வாய் பராக்கு
சங்கரியின் மைந்தனே குகனே பராக்கு

5. குன்றுதோ றாடிவரு குமாரா பராக்கு
குறுமுனிக் கினியதமிழ் கொடுத்தாய் பராக்கு

6. மங்கை தெய்வானை மண மகிழ்வாய் பராக்கு
மால் மருக முருக சண்முகனே பராக்கு

## லாலி

1. லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட கண்ட சுத லாலி லாலி

2. ஆறு படை வீடுடைய ஐயா லாலி
ஆறு முக வேலவனே லாலி லாலி

3. சூரனுடல் கூறுபடச் செய்வாய் லாலி
சுத்த சத்துவப் பொருளே லாலி லாலி

4. வீர வடிவேல் முருகா லாலி லாலி
வெற்றி தரும் வித்தகனே லாலி லாலி

5. வள்ளி தெய்வ யானை மணவாளா லாலி
அல்லல் களைந் தன்பர் துயர் தீர்ப்பாய் லாலி

6. கொள்ளை பகை நீறுபடச் செய்வாய் லாலி
கோணைமுத்துக் குமாரரே லாலி லாலி.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

1. கார்த்திகைப் பெண்களறுவர் கொங்கையமு துண்டுவளர்
கீர்த்திமிகு கார்த்திகேய மூர்த்தியுமை பாலகர்க்கு (மங்)

2. விண்ணவர்க்கும் மன்னவர்க்கும் வேதமோதும் வேதியர்க்கும்
கண்ணின்மணி யாயிருந்து கருணைபொழி கந்தனுக்கு (மங்)

3. சரவணத்துள்ளே வளர்ந்து சராசரத்துள்ளே நிறைந்து
அரன்தனக்கும் அயன்தனக்கும் அரும்பொரு ளுரைத்தவற்கு (மங்)

4. கோணைமுத்துக் குமரனடி கூடும் அடியார் தமக்கும்
தேனினு மினிய தமிழ்த் தெய்வ அடித் தாசருக்கும் (மங்)





# திருகோணமலை

# முத்துக்குமார சுவாமி வெண்பா

★

ஆக்கியோன் :
திரு. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள்
திருக்கோணமலை,

★

### விநாயகர் வணக்கம்

கங்கையணியுங் கணபதியைக் கைதொழுது
மங்குல் படி கோணை மாமலையில் - தங்குமொரு
முத்துக் குமார முதல்வன் கழலிணைக்கோர்
பத்துப் பகர்வல் வெண்பா.

1. திருமாலு நான்முகனுந் தேடியுங் காணுப்
பெருமா னருள்புதல்வ பேசு - மொருமான்
வயிற்றுதித்த நங்கை மணவாளா கோணை
யயிற் கரத்தா யாற்ற வருள்,

2. தேனுேங்கு சோலைத் திகழிமய கன்னியருள்
வானுேங்கு சோலை மலையோனே - தானுேங்கு
வேலனே கோணை விலங்க லினிதமர்வாய்
காலனுறு போது வந்து கா.

3, வானோர் நிலைகலங்க வந்தெதிர்த்த தாருகனைத்
தானோர் கணத்திற் றபவெறிந்த - கோனுர்
அடியார்க் கருளுமண்ணல் வாழுங் கோணைப்
படியார்க்கு முண்டோ படர்.

4. வாரியாய் மண்ணாய் வளியாய் வசுவனலாய்
பாரிலெடுத்த பலவுருவம் - போரில்
இமைப்பொழுதின் முன்னே யிறந்துபட வென்றோன்
சிமைக் கோணை வெற்பனென்றே செப்பு

5. சயந்தன் முதலமரர் தம்மைச் சிறையில்
நயந்து வைத்த சூரன் நடுவமரில் - பயந்து
சரந்தொடுத்தோ யோடத் தனிக்கோணை வெற்ப
சுரந்தாக்கி யஞ்சலென்றே கா.

6. திங்கள் சுழியென்பு தேன்பிலுற்றும் நறையார்
கங்கையணி சங்கரன் காதலா - செங்கண்
அரிமருகா கோணை யசலமினி தமர்வாய்
பரிமுருகா வென்றே பகர்

7. செங்கயற் கண் மாதுறத்தின் செல்வியுமையாள் புதல்வா
அங்கயற் கண் வள்ளி தெய்வ யானையாம் - மங்கையர்கள்
வாழவரைக் கோணை வைகுமுருகா வுன்னைத்
தாழ வரநிதம் யாண்டுந் தா.

8. பூதப் படையயள்ளிப் போசனமா யுண்டுவந்த
ஏதத்தரி யெறிந்த வேந்தல் - சீதத்து
மேகம் படி. சோலை விண்ணேங்கு கோணையார்
மாகந்த னென்றே வழுத்து.

6, ஓராறு சென்னியுடையானைக் கோணையா
ரீராறு கண்சுனுடை யெம்மானைத் - தேராது
போக்காதே வீண்காலம் பொங்கும் பழவினையை
நீக்கு மனனே நினைந்து.

10. கங்கை மகனைக் கருமால் மருமகனைச்
செங்கை யயிலுடைய செவ்வேளைத் - தங்கடியார்
துன்பந் தீர்கோணைச் சுரநிறையை வாழ்த்திஞல்
இன்பம் பெறுவா யினிது



# அருள் போலிக

"பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு"
சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதீன பிரதம குரு
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
நயினுதீவு - இலங்கை.

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநில வாழ்த்தே"

இறைபற்றை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்றது திருக்கோயில் வழிபாடு. அதனுல் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ருர் ஔவைப் பிராட்டியார். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் மாண்புடைச் செயலாகும். மனிதப் பிறவி மாண் புறுவது பொன்னுலோ, புகழாலோ, பதவியாலோ அன்று. பற்று அற்றுன் தாழினைப் பற்றுவதற்கு உலகப் பற்றுக்களை நீக்கி சரியை, கிரியை, யோக ஞான மார்க்கத்தால் இறை வழிபாடு செய்தலாகும்: இறைவனைக் காண்பதற்கு அருட் திருமேனிகளைத் தாங்கி காக்ஷி கொடுக்கும் கருவூலங்கள் திருக்கோயில்களேயாம். கோயில்கள் கடவுள் பக்திக்கு வாயில்கள், சித்தத்தை சிவன்பால் வைக்கும் அடியார்கட்கு பாலில் படு நெய் போல், இறைவன் திருக்கோவில்களிடத்தே விளங்கும் அருட் திருமேனிகளிடத்தே நின்று அருள்வான், இவ்வாலயங்களை அமைப்பதற்கு வேதாகமங்களும் சிற்ப சாஸ்திரமும் தோன்றின. ஆலய அமைப்புகளும் கும்பாபிஷேகமும் உற்சவங்களும், பிராயச்சித்தங்களும் காமியங்களும் அனுஷ்டிக்கப் படுவது ஆகம மாபு, இவ் விதிகளை அறிந்து பாரம்பர்யமாகவே பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு தரம் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இந் நிலையில்தான் பாடல் பெற்ற ஸ்தலமாகிய திருக்கோணமலையின் சிகரமான கோணேஸ்வரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுகிய ஐம்முகக் கடவுளின் மைந்தனுகிய அறுமுகச் செவ்வேள் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி பெருமானது கும்பாபிஷேகம் நடைபெறுகிறது வந்திக்கு மலரோனுதி வானவர் குறைகள் நீக்சி அறிஞர் ஆனேர் சித்திக்கும் தனது ஐந்து முகத்துடன் அதோ முகமும் கொண்டு ஆறுமுகத்து வேலவன் காக்ஷி கொடுத்து பல நாமப் பெயர்களில் ஒரு திருமுருகனுகி முத்துக்குமாரனுகி காக்ஷி தருகின்ருன். முத்து என்பது அழகு, மகிழ்ச்சி, பிரியம் என்றும் பொருள் தரும். முத்துக்குமரன் என்பதற்கு இன்பமான இளையவன், மலைப்புதல்வி செல்வக்குமர நாயகன், அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனி என்ற கருத்துகள் சிறப்புற அமைகின்றன.

இம்மை, மறுமை நற்பயனைத் தரும் கும்பாபிஷேகத்தைச் செய்வதும், தரிசிப்பதும் பல பிறவிகளின் புண்ணியப் பேருகும். கும்பாபிஷேகத்தை நடத்துகின்றவர்களும், முருகனின் பெருமையையும் அருட் திறனையும் தாங்கி மலரும் மலர், பலர் புகழ் ஞாயிருக வெளியிடுவோரும் நனி சிறந்து நாடும் மக்களும் நலம்பெறக் கந்தக் கடம்பனை வாழ்த்தி வணங்குவாம்.

உ

ஓம் சரவணபவ



# சிவனே குகன், குகனே சிவன்


**திருக்கோணமலை,**

**ஸ்ரீ வீரகத்தி விநாயகராலயம், ஸ்ரீ விஸ்வநாதசுவாமி (சிவன்) ஆலயம்**

ஆகியவற்றின் முன்னுள் பிரதம குருவும்,

திருக்கோணமலை, கோணேஸ்வர அர்ச்சக உரிமையாளருமாகிய

**பிரம்மஸ்ரீ கு. சண்முகரத்ன சர்மா அவர்கள்**


ஊரிலான் குணம் குறி இலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் றனக்கு
நேரிலான் குகக் கடவுளாய்
என்னுளே நின்றான்

அனாதி மல முத்த விபுத்துவப் பொருளாய், உருவம், குணம்: குறி செயல், பெயர் முதலியன இல்லாதவராய், ஒப்புயர் வின்றி ஆன்மாக்களின் இருதயத்திலே வீற்றிருப்பவர் குகப் பெருமானே. அன்றியும். சிவனே குகன், குகனே சிவன் எனக் கூறும் பதி நூல்களெல்லாம். இக் கருத்துப் பற்றியே,

''ஈசனே யவனுடலான் மதலையாயினன் கா
ஞாசிலாவவ னறுமுகத் துண்மையாலறி நீ
பேசி லாங்கவன் பரனொடு பேதகனல்லன்
நேசலாவகன் மணியிடைக் கதிர் வருதிறம் போல்''

என வரும் கந்தபுராணத்திருவிருத்தத்தின் வாயிலாக செவ்வனே அறியலாம்.

''ஆதலின் நமது சக்தி அறுமுகனவனும் யாமும் பேதகமில்லை''

என வரும் வாக்கியங்களும் இதனை வலியுறுத்தும்.

தேவி திருமுகம் ஒன்றும், சிவபெருமான் திருமுகம் ஐந்தும் சேர்ந்து ஆறுமுகமாயிருத்தலும், அவருடைய திருமுகம், திருக்கரங்கள், திருக்கண்கள் ஆகியவற்றை ஒருமித்து எண்ணும் பொழுது முப்பதாவது போல, முருகனின் திருமுகங்கள், திருக்கரங்கள், திருக்கண்கள் ஆகியவற்றை எண்ணும் போது முப்பதாகின்றது.



இதே போன்று தாரகாக்கன் முதலிய அசுரர் புரங்களையும், காமனையும், சிவபெருமான் புன்னகையாலும், திருவிழியாலும் எரித்து அழித்தது போல, குமரப் பெருமானும் அசுர சேனைகளின் புரங்களைப் புன்னகையாலும், திருவிழியாலும் அழித்தருளினார்.

சிவபெருமானுக்கு முச் சக்தியிருத்தல் போல, சிவனாகிய குகபரம் பிரமத்திற்கும், வள்ளியம்மையாராகிய இச்சா சக்தியும். தெய்வயானை யம்மையாராகிய கிரியா சக்தியும்; வேற்படையாகிய ஞான சக்தியும் உண்டு சிவபெருமான் யோக, போக, வேத மூர்த்தங்களையும், அருவம், உருவம். அருவுருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையும் உடையவர் போல, குகப் பெருமானும், அவற்றைக் கொண்டமையாலும், சிவ பெருமான் பஞ்சகிருத்தியங்களை நடத்துவது போல இவரும் நடத்தி வருவதாலும் இன்னும் பல வேதுக்களாலும் சிவனும் குகனும் ஒருவரே எனக் கொள்க.

வேதமும்,

''யச்ச மகேச்வர யாசோமா, யச்ச விநாயக
யச்ச ஸ்கந்த'' அதாவது

''அவனே மகேசுரன், அவனே உமை, அவனே விநாயகன்
அவனே ஸ்கந்தன்,

எனப் பஞ்ச ருத்திரங்களுளொன்றான அதர்வ சிரசு என்னும் சாகையானும்,

''த்வம் ஸ்திரி த்வம்புமநசி, த்வம் குமார'' அதாவது
நீயே பெண், நீயே ஆண், நீயே குமாரன்

எனச் சுவேதா சுவதரச் சாகையானும் சிவனே கந்தன் என உணர்த்திற்று.

திருக்கோணமலை அருள் மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயத்திலே, கர்ப்பக் கிரகத்தில் எழுந்து காட்சி அளித்துக் கொண்டு இருப்பது லிங்க ஸ்வரூபமே, இவற்றை அனேகர் முருகன் ஆலயத்தில் லிங்கம் இருப்பது ஏன் எனத் திகைக்கிறார்கள்.

மேற்கூறிய காரணங்களைக் கொண்டு, முருகப்பெருமான் லிங்க ஸ்வரூபமாக காட்சி அளிக்கலாம் என்பதை உணர்ந்து கொள்க.

இலங்கையிலே, முருகன் ஆலயத்தில் லிங்க ஸ்வரூபமாக காட்சியளிக்கும் திருக்கோவில் இது ஒன்றே தான் உள்ளது. இதே போன்று இந்தியாவிலும் ஒரே ஒரு முருகன் ஸ்தலம் இருக்கின்றது.

இவ்வாலயத்தில் நாம் ''முருகா'' என்றே, அன்றி ''சிவனே'' என்றே மனம் உருகி வழிபடும் போது, அந்த அருவுருவப் பரம் பொருள் எழுந்த வேண்டியதை அருளுவர்.

முருகா சரணம்! முருகா சரணம்!!

ஓம் தத்சத்.

ஓம்

சரவண பவாய நம



# என்கடன் பணி செய்து கிடப்பதே

திரு. இ. ஸ்ரீதான் அவர்கள்.

ஆலய தர்மகர்த்தா.

---

நமது சமய குரவர்களுள் ஒருவராகிய அப்பர் சுவாமிகள் ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்று கூறுகின்றார், அவர் செய்த பணிகளெல்லாம் சிவப் பணிகள். அப்பணிகளுள் உளவாரத் திருப்பணியே தலையாய பணியாக அமைந்து அதுவே தவப்பணியாக நிறைவு பெற்றது. எமது முன்னோர்கள் ஆலயம் அமைப்பதையும் ஒரு தவப்பணியாகக் கருதினார்கள், அக்கருத்தில் பிறந்தது தான் திருக்கோணமலை முத்துக்குமார சுவாமி கோவில்,

முருகப் பெருமானுக்குக் குமாரன் என்று ஒரு பெயருமுண்டு குமாரன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்களுண்டு. ''மாரன்'' என்றால் மன்மதன், ''கு'' என்பது இகழ்ச்சியை காட்டும். தன் அழகால்மன் மதனை இகழ்ந்தவன் என்பது ஒரு பொருள். ''கு'' என்றால் உலகம். ''ம'' என்றால் திருமகள். ''ர'' என்றால் தருபவன். உலகில் பல செல்வங்களையும் தருபவன் குமாரன். இது இரண்டாவது பொருள். குமாரன் என்பது குமரன் என்ற சொற்பொருளைத் தரும். அதாவது என்றும் இளையோனாய் விளங்குபவன் என்பது மூன்றாவது பொருள். அழகனாகவும், என்றும் இளையோனாகவும், குன்றாத செல்வங்களாகிய அஷ்டஐஸ்வரியங்களையெல்லாம் தருபவனாகவும் விளங்குபவன் குமார சுவாமி, முத்தைப் போன்று குளிர்ந்த கருணையுடையவனாதலால் முருகப் பெருமானுக்கு ''முத்துக்குமாரசுவாமி'' என்றொரு திருநாமம் அமைந்திருக்கின்றது.

இந்த அருமைத் திருநாமத்தையுடைய எம்பெருமானுக்கு நமது முன்னோர்கள் ஆலயமெடுத்திருந்தார்கள். தேவாரப் பாடல்பெற்ற தெட்சண கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்தில் அமர்ந்திருக்கும் கோணேசப் பெருமானருளால் எமது முன்னோர்கள் இந்த ஆலயத்தையமைத்து வழிபட்டு வந்தார்கள்''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என உணர்ந்து நாமும் அதனைத் தொடரத் திருவருள் கூட்டியுள்ளது. எமது பெற்றோர் முத்துக்குமார சுவாமி கோவில் திருப்பணிகளைச் செய்து கும்பாபிஷேகத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஆர்வ



முடன் வாழ்ந்தார்கள், அமரத்துவமடைந்த அவர்களுடைய ஆசையைப் பயபக்தியோடு நிறைவேற்ற எமக்குக் கிடைத்த பெரும் பேற்றை நினைந்து. நினைந்து இறைவனைப் போற்றுகின்றோம். எமது தந்தையாகிய திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்களும், தாயாராகிய திருமதி சிவலோகநாயகி - இராஜவரோதயம் அவர்களும் இந்தக் கோவில் திருப்பணிகளைச் செய்து மகா கும்பாபிஷேகத்தைக் கண்குளிரக் காணவேண்டுமென்று தணியாத தாகமுடையவர்களாயிருந்தவர்கள். அப்போது நாம் ஒன்றுமறியாச் சிறுவர்கள், அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற முடியுமா?, ஆலயத்தை நிர்வகிக்கும் ஆற்றலும், அனுபவமும் அற்றவர்களாயிருந்தோம். அத்தனை பொறுப்புக்களையும் ஏற்றுத் தனியே சுமந்து ஆலயத்தை நடத்திவந்தவர் எங்கள் மாமனாகிய திரு சி. சிவானந்தம் அவர்கள், அன்னாருடைய தளராத ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும், முத்துக்குமாரப் பெருமானிடம் வைத்துள்ள பயபக்தியாலும், முருகப்பெருமானுடைய திருவருளாலும் இன்று (25-4-1983) மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதைக் கண்குளிரக் கண்டு பேரானந்தமடைகின்றோம், ஒன்றுக்கும் பற்றாத நாம் பெருமானுடைய பெருங்கருணையை நினைவதோடு. எமது தாய் தந்தையரையும், முன்னோரையும் நினைவு கூருகின்றோம் அவர்கள் விட்டுச் சென்ற திருப்பணிகளைத் தொடருவதற்கு வல்லமையைத் தந்த எல்லாம் வல்ல முத்துக்குமாரசுவாமியின் திருவடிகளைப் போற்றுகின்றோம். இம் மாபெரும் கைங்கரியத்தை நிறைவேற்ற உதவி புரிந்த சகல மக்களையும், சிவாசாரியப் பெருமக்களையும், சிற்பிகளையும் மனதில் வைத்துப் போற்றுகின்றோம், அன்பர் பணியும், அரன் பணியும் செய்ய எம்மை ஆளாக்கி வைத்த குமாரப் பெருமானின் திருவடிகளுக்கே யாவும் சமர்ப்பணம்.



ஓம் முத்துக்குமாராய நம.

# எங்கள் குலதெய்வம், முத்துக்குமாரன்

**திரு. சிவசேகரம் - சிவானந்தம் அவர்கள்**

முகாமையாளர் :

ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

திருக்கோணமலை.

தெட்சண கயிலாயம் என்று போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்தின் தெய்வீகம் சாமானிய மனித புத்திக்கு அப்பாற்பட்டது. தவயோகிகளின் சித்தத்துட் தித்திக்கும் தெய்வீகம் அது. இந்தத் தலத்தில் கோயில் கொண்டருளியுள்ள கோணேசப் பெருமானுடைய அருளாட்சியால் இந்த நாடு வாழ்ந்துகொண்டிருக்கின்றது. ஏழாம் நூற்றுண்டில் திருவவதாரம் செய்த திருஞானசம்பந்தப் பெருமான் ''கோயிலும்'' சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' என்று திருக்கோணமலைத் திருப்பதிகத்தில் திருவாய் மலர்ந்தருளியுள்ளதைச் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வது சாலவும் பொருத்தமானதாகும்.

கோணேஸ்வரத்தைச் சூழ்ந்து பல கோவில்கள் இன்றும் காணப்படுகின்றன. கோணமாமலையை அடுத்துள்ள பல ஊர்களும் கோணேசப் பெருமானுக்குத் தொண்டுபுரியும் தொழும் பர்கள் வாழ்விடமாகவே காணப்படுகின்றன. குளக்கோட்டு மன்னனுடைய கோணேசர் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்துகின்றது. புராண, இதிகாச வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள திருகோணேஸ்வரத்தைச் சுற்றியமைந்துள்ள பலகோவில்களுள் முத்துக்குமாரசுவாமி கோவிலும் ஒரு சிறந்த முருகஸ்தலமாக விளங்குகின்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடுவதற்கு ''முத்தைத் தரு'' என்று முதலடியெடுத்துக் கொடுத்தவர் முருகப்பெருமான் அந்த முருகை முதலாகக் கொண்ட முத்துக் குமரனுடைய திருநாமத்தைத் தாங்கி விளங்குவது முத்துக்குமார சுவாமி கோவில் இந்த ஆலயம் தோன்றிய வரலாற்றை இந்நூலில் சைவப் புலவர் - பண்டிதர். இ. வடிவேல் அவர்கள் தந்திருக்கின்றூர்கள்.

எனது மைத்துனர் திருவாளர். ந.இ, இராஜவரதோயமவர்கள் இந்த ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றிக் குப்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சிந்தனை செய்துகொண்டிருந்தார் அவருடைய அரசியல் வாழ்க்கை ஒருவகையில் அவருடைய எண்ணத்திற்குத் தடையாயிருந்து வந்தது. கி, பி 1624இல் போத்துக்கேசருடைய அட்டூளியத்தால் மறைந்துபோன திருக்கோணேஸ்வரத்தின் தெய்வீகமும், பண்டைப் பெருமைகளும் இராஜவரோதயம் அவர்களின் நெஞ்சில் இடையிடையே மலர்வதுண்டு. முத்துக்குமார சுவாமி கோவில் வீதியில் உடர்பை மண்தரையில் நீட்டிவிட்டுக் கற்பனையுலகில் சஞ்சரிக்கும் போதெல்லாம் அவருடைய மனதில் கோணேஸ்வரத்தின் வரலாறுகள் மின்னல்போல் தோன்றி மறைவதுண்டு. இழந்துபோன கோணேசர் கோவிலை எண்ணியெண்ணி ஏங்கிக்கொண்டிருந்த காலத்தில்தான் கி. பி, 1950 ஆம் ஆண்டு



கோணேசப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் நிலத்திலிருந்து வெளிப்பட்டார், எதிர்பாராத இந்த நிகழ்ச்சி எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது இராஜவரோதயருக்கு. முத்துக்குமார சுவாமி கோவில் திருப்பணியையும், கும்பாபிஷேகத்தையும் மறந்தார். கோணேசப் பெருமானுக்குக் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்த பின்னரே முத்துக்குமாரருடைய கும்பாபிஷேகத்தைச் செய்யவேண்டும் என்று சங்கற்பம் செய்துகொண்டார்.

சைவப் பெருமக்களின் சக்தியை ஒன்று திரட்டிக் கோணேசர் கோவிலைக் கட்டிக் கோணலிங்கப் பெருமானைப் பிரதிஷ்டை செய்வித்து 1963ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3 ஆம் திகதி கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிய திருவாளர் ந இ. இராஜவரோதயமவர்கள்.

1963ஆம் ஆண்டு ஆவணிமாதம் அமரத்துவமடைந்துவிட்டார் இராஜவரோதயம் அவர்களின் மறைவையடுத்து, பிரம்மஸ்ரீ. சு. கு. சோமாஸ்கந்த குருக்களையா அவர்கள் முத்துக்குமாரசுவாமி கோவிலைப் பராபரித்து, பூஜைகளை நடத்தி பெருமானுடைய மங்கள கைங்கரியங்களைச் சில வருடங்கள் நடத்தி வந்தார். இப் பெரும் தெய்வப்பணியாற்றிய ஐயா அவர்களையும், ஆலயத்தினயலிலிருந்து. வேண்டும்போதெல்லாம் அனுசரணையாக உதவிபுரிந்து வந்த பிரம்மஸ்ரீ சு, சண்முகரெத்தின சர்மா அவர்களையும், இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்து நன்றிப்பெருக்கோடு மகிழ்ச்சியடைகின்றேன். இராஜவரோதயமவர்களின் தந்தையாராகிய திரு எஸ் நவரெத்தினமவர்கள் சிவபதமடைந்த போது வரோதயருக்கு வயது ஐந்து. கோவில் பராபரிப்புப் பொறுப்பை ஏற்கும் உரிமைக்குரிய இராஜவரோதயர் சிறு பையனுதலால், அவருடைய பேத்தியார் திருமதி. தங்கமணி செல்லப்பா அம்மையார் கோவில் பராபரிப்புப் பொறுப்பையேற்று நடத்திவந்தார். அன்னாருடைய மகள் செல்வி. செ. இரத்தினசவுந்தரத்தை திரு. பரமநாதர்-சிவசேகரமவர்கள் திருமணம் செய்தபின் திரு. ப, சிவசேகரமவர்கள் ஆலயப் பொறுப்பையேற்றுச் சிலவருடங்களாக நடத்திவந்தார். அதன்பின் திரு செ. லிங்கரெட்டினமவர்கள் ஆலயத்தைப் பராபரிக்கும் ஆற்றலும், தகுதியுமுடையவராயிருந்ததால் ஆலயப் பொறுப்பையேற்று நடத்தி வந்து, வயதுத் தகுதியும், உரிமையுமுடைய திரு. ந இ. இராஜவரோதயம் அவர்களிடம் பராபரிப்புரிமைகள் யாவற்றையும் கையளித்தார், இருபத்தொரு வயது தொடக்கம் ஐம்பத்துநாலு வயதுவரை இராஜவரோதயமவர்கள் ஆலயத்தைச் சிறப்பாக நடத்திவந்தார். அவர் அமரத்துவமடைந்தபின் 1963 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலிருந்து ஆலயப் பொறுப்பையேற்று ஸ்ரீ முத்துக்குமாரப் பெருமானருளால் பராபரித்து வருகின்றேன்.

இடைப்பட்ட காலத்தில் வரோதயமவர்களுடைய பிள்ளைகளாகிய எனது மருமக்கள் மிகவும் பாலிய வயதினராயிருந்ததால், ஆலய நிர்வாகப் பொறுப்பையேற்று நித்திய, நைமித்திக பூசைகளையும், திருவிழாக்களையும் முருகப் பெருமானுடைய திருவருளால் நடத்திக்கொண்டு வந்தேன். இரண்டாவது உலக மகாயுத்த காலத்திலும், அதன் பின்னரும் பெருமானுடைய கைங்கரியங்களுக்கு இடையூறில்லாமல் ஆலயக் கடமைகளை நிறைவேற்றிவந்த போதிலும் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்ற பெருஞ்சுமை நெஞ்சைக் கனமாக அழுத்திக்கொண்டிருந்தது. சைவப் பெருமக்கள் கைகொடுத்துதவ முன்வந்தது பெரும் ஆறுதலையளித்தது. இராஜவரோதயமவர்களுடைய ஆத்ம பலத்தாலும், திருமதி. சிவலோகநாயகி – இராஜவரோதயம் அவர்களுடைய ஊக்கத்தாலும், சைவப் பெருமக்களின் ஆதரவாலும், அன்பர்கள், தொண்டர்கள், அடி

யார்களின் உதவியாலும் இன்று (25-4-83) முத்துக்குமாரசுவாமி கோவிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது, 1932ஆம் ஆண்டுக்குப்பின் இன்றுதான் திருவருளால் இந்த மங்கள காரியம் நிறைவேறுகின்றது.

''கடவுள் உங்களை வளர்க்கிறார், நீங்கள் கடவுளை வளருங்கள்'' என்பது சான்றோர் கூறும் அமுதவாசகம். இறைவனருளால் நாமெல்லோரும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்குக் காலத்திற்குக் காலம் திருப்பணிகளை நிறைவேற்றிச் சீரும் திருவும் பொழியச் செய்து இறைவனை நமது நெஞ்சகத்திலிருத்தி வாழ்வதே தெய்வீக வாழ்வு, சஞ்சலம் நிறைந்த இந்த உலகத்தில் அஞ்சேல் என்று அருள் புரிந்து வாழவைப்பவன் இறைவன். இந்தக் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாயிருப்பவன் கந்தப்பெருமான். குலிசமும், வேலும், அபயமும், வரதமும் கொண்ட சதுர்ப்புஜங்களோடு இச்சா சக்தி, கிரியாசத்தியாகிய வள்ளி, தெய்வயானையுடன், ஞானசக்தியாகிய வேலையும் தாங்கி இங்கு எழுந்தருளியுள்ள முத்துக்குமரன் எல்லாருக்கும் இன்னருள் புரிபவன், இதனை உணர்ந்து எமது முன்னோர் வழிநின்று நாமும் தொன்டாற்றி வழிபட்டு வருகின்றோம்.

இந்த ஆலயத்திற்கு ஒரு தனிச் சிறப்புண்டு, கருவறையில் லிங்கமும், வேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதுதான் அந்தச் சிறப்பு: அருபியாயுள்ள இறைவனை அருவுருவமாகிய லிங்க வடிவிலும், உருவமாகிய வேல் வடிவிலும் இந்த ஆலயத்தில் எமது முன்னோர் பிரதிஷ்டை செய்திருக்கின்றார்கள் எனவே ''அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப் பிரம்மமாய் நிற்கும்'' முத்துக்குமாரப் பெருமானை வழிபட்டு எல்லோரும் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழவேண்டுமென்பது எமது பிரார்த்தனை. திருப்பணி வேலைகளை ஆரம்பித்தபோது பிள்ளையாருக்கும், பழனியாண்டவருக்கும், நவக்கிரகங்களுக்கும் தனித் தனியே கோவில்கள் அமைக்கவேண்டுமென்று கருதினோம். அதற்கும் முத்துக்குமாரப் பெருமான் திருவருள் கூட்டியுள்ளார்

கும்பாபிஷேகம் நடைபெறும் ஆலயங்களில் ஞாபகார்த்தமாக மலர் வெளியிடுவது ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகின்றது, அதனால் நாமும் ஒரு நூலை வெளியிடத் தீர்மானித்தோம். முருகனைப் பற்றிய நூல்கள் கிடைப்பது அரிதாயிருப்பதால் எல்லோரும் படித்து இன்புறத் தக்கதாக கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தசஷ்டி கவசம், கந்தர்கலிவெண்பா, சண்முக கவசம் திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களை இந்த ஞாபகார்த்த வெளியீட்டில் சேர்த்துள்ளோம், இதனைப் பெற்று ஆதரித்துக் கண்கண்ட தெய்வமாகிய முத்துக்குமார சுவாமியின் கருணையால் இன்புற்று வாழ்வீர்களாக.



ஓம்

முருகா சரணம்

# நன்றியுரை

## திரு. இ. ஸ்ரீதரன் அவர்கள்

''நன்றி மறப்பது நன்றன்று'' என்பது மானிட வாழ்க்கைக் கோட்பாடு. திருக்கோணமலை முத்துக்குமார சுவாமி கோவில் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை ஒன்றொன்றாய் எண்ணிப் பார்க்கும்போது எமது உள்ளத்துள் ஏதோ இனம்புரியாத இன்ப உணர்ச்சி மலர்கின்றது. அந்த உணர்ச்சியை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மின்சார நிலையத்திலுள்ள மின்னியந்திரத்திற்கு சக்தியை ஏற்படுத்தினால்தான், அது மின்சக்தியை வேண்டுவார்க்கு வேண்டும்போதெல்லாம் வழங்கும், அதுபோல ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திக்கு மந்திர, தந்திர, யந்திர. கிரியா காரியங்களால் ஏற்படும் தெய்வீக சக்தியினால் அந்த மூர்த்தியானது வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்து, அனைவருக்கும் அருளைச் சுரந்து காக்கும். இத்தகைய மகத்தான கர்மத்தையாற்றிய சிவாச்சாரியப் பெருமக்களின் பிரதம குருவாயிருந்து இம் மாபெரும் கும்பாபிஷேகத்தை மங்கள கரமாக நிறைவேற்றி வைத்த பிரதிஷ்டா குரு-சிவாகம ஞானபானு, சிவஸ்ரீ. சுவாமிநாத - பரமேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும், உடனிருந்து சிவப்பணியாற்றிய சிவாச்சாரியப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றோம். முத்துக்குமார சுவாமி கோவில் பிரதம குருவாகிய சிவாச்சாரிய சிரோரத்தினம், பூரண - சண்முகரத்தினக் குருக்கள் அவர்களுக்குப் பணிவன்புடன் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

மின்சக்தியை அனுபவிப்பதற்கு மத்திய மின்னிலையம் மாத்திரம் இருந்தால் போதுமா? உப மின்னிலையங்களும் வேண்டுமே என்று எண்ணிய அறிஞர்களும் சிலருளர், மூலவரான முத்துக்குமார சுவாமிக்குப் பரிவார மூர்த்திகளாக, பிள்ளையார், பழனியாண்டவர், நவக்கிரகங்கள் என்பவர்களுக்கும் புதிய ஆலயங்களும், பெருமான் எழுந்தருளியிருந்து அருள் பாலிப்பதற்கு வசந்த மண்டபமும், விமானங்களுக்கு அழகிய கலசங்களும் அமைக்க வேண்டுமென்று எண்ணங்கொண்ட சிவதர்ம சீலர்களான சில அன்பர்கள் இப் பெரும் பணிகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றி வைத்தார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி இறையருள் பெற்று இனிது வாழ்கவென முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். புனருத்தாரண வேலைகளைத் தெய்வீக அம்சம் பொருந்தும் வண்ணம் சிற்பசாஸ்திர முறைப்படி அமைத்துத் தந்த தெய்வச் சிற்பாசாரியர்களுக்கும் வர்ண அமைப்பு வேலைகளைச் சிறப்பாகச் செய்த ஓவியர், திருநெல்வேலி திரு இரத்தினம் கனகராஜா குழுவினருக்கும் எமது மனமுவந்த நன்றி உரித்தாகுக.

தொண்டர் நாள்தோறும் பணிசெய்ய அருள் செய்யும் முத்துக்குமரப் பெருமான் கோவில் கொண்டருளியுள்ள ஆலயத்தின் அருகே தொண்டுக்காகக் காத்திருப்பது முருகானந்த சபை: இச் சபை உறுப்பினர்கள் முன்வந்து வள்ளியம்மன் மண்டபத் திருப்பணியையும் மகா மண்டபத் திருத்த வேலைகளையும் மனமுவந்து செய்து நிறைவேற்றினர்கள், எந்த ஒரு பிரதிபலனையுங் கருதாமல் சிரம தானம் செய்வது சிறந்த சிவத் தொண்டு எனக் கருதிய சிரமதானத் தொண்டர்கள் அவ்வப்போது மனமுவந்து தொண்டாற்றினர்கள். ஆலயத்தின் அயலிலுள்ள அன்பர்கள். அடியார்கள், அனைவரும் தெய்வத் திருப்பணிக்குத் தங்களை அர்ப்பணித்துப் பணியாற்றினர்கள். இவர்களையெல்லாம் நினைத்து நன்றி கூறி மகிழ்ச்சியடைகின்றோம்.

''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'' என்பது வள்ளுவர் வாக்கு இவ் வுலக வாழ்க்கையில் இன்பமனுபவிப்பதற்கு அருளோடு பொருளும் வேண்டப்படுகின்றது, தாராள சிந்தையுடைய சிவநெறிச் செல்வர்கள் வழங்கிய நிதியுதவியினுல் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று மகா கும்பாபிஷேகம் நிறைவேறியிருக்கின்றது. இம் மாபெரும் கைங்கரியத்திற்கு நிதியுதவிய அனைவருக்கும் நன்றி கூறித் திருவருள் பொலிகவென வாழ்த்துகின்றோம்.

கும்பாபிஷேக ஞாபகார்த்தமாக வெளியிடும் இந்நூலை மிக அழகாகவும் சிறப்பாகவும் உரிய காலத்தில் அச்சிட்டுதவிய கோணேஸ்வர அச்சக உரிமையாளர் பிர்மஸ்ரீ, சு. சண்முகரெத்தின சர்மா அவர்களுக்கும் அவரது உதவியாளர்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமைப்படுகின்றோம், முத்துக்குமாரப் பெருமானின் மகா கும்பாபிஷேக ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் இந் நூலைத் தொகுத்துத் தந்துதவிய சைவப் புலவர் - பண்டிதர் இ. வடிவேல் ஆசிரியர் அவர்களுக்குப் பணிவுடன் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்,

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் தொழாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருக்கோணமலை, இ. ஸ்ரீதரன்
ஸ்ரீ முத்துக்குமார தேவஸ்தானம் ஆலய தர்மகர்த்தா.
25-4-83.





ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தான
நாகதப்பிரான் ஆலயத்தின் முன்னைநாள் தோற்றம்

# நூல்களின் முன்னுரை

சைவப் புலவர் பண்டிதர்:

**இ. வடிவேல் அவர்கள்**

—★—

கந்தரனுபூதி ஒரு மந்திர நூல். ஆழ்ந்து, அகன்று நுண்ணிதாகிய அரிய பெரிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் ஒப்பற்ற நூல். அருட்பண்புகள் ஒருங்கேயமைந்த சுருங்கிய நூல். முருகப் பெருமானுடைய துதி நூல்களுள் இதற்கு இணையாக வேறு எதுவும் இல்லையென்பது அறிஞர்கள் அனைவருக்கும் ஒப்பமுடிந்த உண்மை இதனை நாள்தோறும் உளங்கனிந்து ஓதுவோர் இகபர நலன்களை எளிதிற் பெறுவர்.

கந்தரனுபூதியிலுள்ள ஐம்பத்தொரு மந்திர மலர்களையும் அன்பு என்ற நாரினால் நாவிலே அழகாகச்சேர்த்து; மனம் என்ற தாமரைப் பூவைக் குஞ்சமாக நடுவே அமைத்து, மாலையாகத் தொடுத்து, அதில் ஞானம் என்ற நறுமணங் கமழவும், புத்தி என்ற வண்டு பாடவும் செய்து அந்த மாலையை அறுமுகப் பெருமானின் அடிமலர்களில் அணிய வேண்டும். இவ்வாறு மந்திரமாலை தொடுக்கும் விதியை நமது குருநாதராகிய அருணகிரிநாதர் கூறுமாறு காண்க.

ஆசைகூர் பத்தனேன் மனோபத்மமான பூவைத்து நடுவேயன்

பான நூலிட்டு நாவிலே சித்ரமாகவே கட்டி ஒருஞான

வாசம் வீசிப் ரகாசியா நிற்ப மாசிலோர் புத்தி அளிபாட

மாத்ருகா புஷ்ப மாலை கோலப் ரவாள பாதத்தில் அணிவேனோ

.....

இந்தத் திருப்புகழின்படி தொடுத்த மந்திர மாலை தான் '' கந்தரனுபூதி '' என உணர்க. இது 51 பாடல்களை யுடையது. பிறவிப் பிணிக்குப் பெருமருந்து. கல்லையும் கரையச் செய்யும் கனியமுதன்ன இனிய செஞ்சொற்களை யுடையது. இத்தகைய அரிய நூலை அருணகிரிநாதர் முருகவேளுடைய அனுபூதியைப் பெற்று, அனுபூதியை ஏனையோரும் பெறும் பொருட்டு ஓதியருளினார். இதன் அருமையைச் சிவஞானச் செல்வராகிய தாயுமானார் பாராட்டுகின்றார்.

'' கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
எந்தையருள் நாடியிருக்குநாள் எந்நாளோ?,,

என்று அருள் மிகு கிருபானந்த வாரியாரவர்கள் விளக்கந் தருகிறார்கள்;

இந்த அரிய நூலுடன் அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த கந்தரலங்காரத்தினையும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த கந்தக்கலிவெண்பாவையும், கந்தசஷ்டி கவசத்தினையும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த சண்முக கவசத்தினையும், நக்கீர தேவர் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படையினையும் முருகப்பெருமானுடைய ஆறுபடைவீடுகளுக்குரிய ஆறு திருப்புகழ்களையும் தொகுத்துச் சேர்த்துள்ளோம். கும்பாபிஷேக தினத்தில் இதனை முருகனடியார்களுக்கு முழுமையாக அளிக்க முத்துக்குமாரப் பெருமான் அனுக்கிரகம் செய்கின்றார்.





உ
குகமயம்
ஓம் சரவணபவ ஓம்
ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# கந்தரநுபூதி

## காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

---

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே. 1

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவினோ தனுநீ யலையோ
வெல்லா மறவென்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூபதியே. 2

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வளைபட் டகைம்மா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுள்நின் றுதயங் குவதே. 5

திணியா னமனோ சிலைமீ துனதா
ளணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமருங் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே. 8

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் படரென் றொழிவேன்
றட்டூ டறவேல் சயிலத் தெறியு
நிட்டூரநிரா குலநிர்ப் பயனே. 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே. 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
யம்மா பொருளொன் றுமறிந் திலனே. 12

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13



கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியா
மைவாய் வழிசெல் லுமவா வினையே. 14

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. 15

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே. 16

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா உணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூ ரபயங் கரனே. 18

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
வடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியே
னுரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. 20

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே. 21

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே. 22

அடியைக் குறியா தறியா மையினுன்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதுளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. 25

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. 26

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயா
னென்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே 27

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. 28

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. 29



செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதா
அவ்வா றறிவா ரறிகின் றதலா
லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. 33

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபால க்ருபா கரனே. 34

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனா
ரோதா யெனவோ தியதெப் பொருளோ
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவா
லரிவா யடியோ டுமகந் தையையே. 37

ஆதா ளியையொன் றறியேனை யறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டனையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. 39

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. 41

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூ திபிறந் ததுவே. 43

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவைபோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. 45



எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாண்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

—✻—

ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
வின்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் கிருபைச் சுடரே. 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

கந்தரனுபூதி முற்றிற்று

உ

# கந்தர் அலங்காரம்

—✶—

## காப்பு

### கட்டளைக் கலித்துறை

அடல் அருணைத் திருக்கோபுரத்தேயந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று கண்டுகொண்டேன் வருவார் தலையில்
தடபடெனப்படுகுட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக்களிற்றுக்கிளைய களிற்றினையே

## நூல்

பேற்றைத் தவஞ்சற்றும் இல்லாத என்னைப் ப்ரபஞ்ச மென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே. 1

அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீர்எரி மூண்ட தென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட்டு இருக்குமன் றோகவி கற்கின்றதே. 2

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேல்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகந் நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே. 3

ஓரவொட் டார்ஒன்றை யுன்னவொட் டார்மலர் இட்டுனதாள்
சேரவொட் டார்ஐவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே, 4

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்று ஓதுங் குவலயமே, 5

பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னால்மெல்ல மெல்லவுள்ளம்
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித்து அறிந்த அன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே. 6



சளத்திற் பிணிபட் டசட்டுக் கிரியைக்குட் டவிக்கு மென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பாய் அவுணர் உரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்து வெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே. 7

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின்மேல்
அளியில் விளைந்ததொர் ஆனந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுகம் ஆறுடைத் தேசிகனே, 8

தேனென்று பாகென்று உவமிக்கொ ணாமொழித் தெய்வவள்ளி
கோனென்று எனக்கு உபதேசித்தது ஒன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன்று அசரீரி யன்று சரீரியன்றே. 9

சொல்லுகைக் கில்லையென் றெல்லாம் இழந்துசும் மாஇருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வாவிகல் வேலன் நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச்...
... செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே. 10

குசைநெகி ழாவெற்றி வேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின் கொத்து
அசைபடு கால்பட்டு அசைந்தது மேரு அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே. 11

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகை என்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்(து)
உடைபட்டது அண்ட கடாகம் உதிர்ந்தது உடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே. 12

ஒருவரைப் பங்கில் உடையாள் குமாரன் உடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்டு எட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே. 13

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடும் ஐவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்க விண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே, 14

தாவடி ஓட்டும் மயிலிலுந் தேவர் தலையிலும் என்
பாவடி ஏட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூடம் முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்தன் சிற்றடியே. 15

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படியிருங் கோள்எழு பாரும் உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே. 16

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக அல்லும் பகலும் இல்லாச்
சூதான தற்ற வெளிக்கே ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே. 17

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர் மின்கள் நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்போல்
கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே. 18

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தைஉற்று
நின்னை உணர்ந்துணர்ந்து எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு
என்னை மறந்திருந் தேன்இறந் தேவிட்டது இவ்வுடம்பே; 19

கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி காள்உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவழி யுண்ணவொட் டாதுங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் அடிப்பிறகே; 20

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மாங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான கரசுர பாஸ்கரனே 21

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்போன் வெய்ய வாரணம்போற்
கைதா னிருபதுடையான் றலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த விலஞ்சியமே. 22

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டு ஓட்டி அதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே. 23

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாணம் முயன்றவனே: 24

தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடா அந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே. 52

நீலச் சிகண்டியில் ஏறும் பிரானெந்த நேரத்திலும்
கோலக் குறத்தி உடன்வரு வான்குரு நாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகி களே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே. 26



ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே; 72

வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே அடைதற்கு அரிதா அருவுரு வாகிஒன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே; 28

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குல்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையில் உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங் காம சமுத்திரமே. 29

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்திருக்கை
வேலென் கிலைகொற் றமயூரம் என்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேஎங்ங னேமுத்தி காண்பதுவே, 30

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண் டரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட்டு எறிபட்டு உதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே, 31

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோர் உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க்கு
இளைத்துத் தவிக்கின்ற என்னையெந் நாள்வந்து இரட்சிப்பையே. 32

முடியாப் பிறவிக் கடலில் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலம் அடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே. 33

பொட்டாக வெற்பைப் பொருதகந் தாதப்பிப் போனதொன்றற்கு
எட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டார் உயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே. 34

பத்தித் துறையிழிந்து ஆநந்த வாரி படிவதனால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே. 35

கழித்தோடும் ஆற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன் என்கிலை குன்றம் எட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே; 36

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக் கள்ளை
மொண்டுண்டு அயர்கினும் வேல்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே 37

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே. 38

உதித்தாங் குஉழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னிலொன்ற
விதித்தாண்டு அருள் தருங் காலமுன் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின்று அம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே. 39

சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்ததிங் கென்தலை மேலயன் கையெழுத்தே. 40

பாலே அனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றியென்றும்
மாலேகொண் டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே, 41

திணங்காட்டும் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்கும்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டும் அல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே எனக்கிங்ஙன் வாய்த்ததுவே. 42

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியால் பணி அணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேல் முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே எனக்கிங்ஙன் கூடியவே. 43

தோலால் சுவர்வைத்து நாலாறு காலில் சுமத்தியிரு
காலால் எழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலால் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே. 44

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டில் உரை உணர்வற்று
இருபூத வீட்டில் இராமலென் றானிரு சோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன் நிட்டூர சூர குலாந்தகனே. 45

நீயா ஞான விநோதந் தனை என்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதர் அல்குற்
தோயா உருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மனோதுக்க மானது மாய்வதற்கே, 46



பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே. 47

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே. 48

சூரிற் கிரியிற் கதிர்வேல் எறிந்தவன் றொண்டர் குழாம்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வமெல்லாம்
நீரில் பொறியென்று அறியாத பாவி நெடுநெஞ்சமே. 49

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பின்நின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூரன்நடுங்க வெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே. 50

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கி அன்பின்
நிலையான மாதவம் செய்குமி னோநும்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதிசோறும் உற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே, 51

சிகராத்திரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழால்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம பணமகுட
நிகராட் சமபட்சபட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட்ச சபட்ச விட்சோப தீர குணதுங்கனே. 52

வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை மெய்யன்பினால்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே. 53

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றித் தளர்ந்த வர்க்கொன்று
ஈகைக்கு எனைவிதித் தாயிலை யேஇலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே, 54

ஆங்கார முமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே. 55

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீர்எரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் 56
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண்டு இருவினையோ மிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய உடம்பிதுவே. 57

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானுக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியால்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே. 58

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரும் ஏற்பவர்க் கிட்டது இடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே. 59

சிந்திக்கி லேனின்று சேவிற்கி லேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகி லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமுங் காயக்கி லேசமும் போக்குதற்கே. 60

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவாபஞ்ச பூதமுமற்று
உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே. 61

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங் கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே. 62

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத் தன்பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே. 63

பட்டிக் கடாவில் வரும்அந்த காவனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே. 64

வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே. 65

நீர்க்கு மிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லாது செல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கு மரற்கன் பிலாதவர் ஞானம் மிகவு நன்றே. 66



பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட்சங் க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே 67

சாடுஞ் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே. 68

தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செயலாஞ் சத்திவா ளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே. 69

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே. 70

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றி முறித்து
அருத்தி யுடம்பை ஒறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே. 71

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதுமறவா தவர்க்கொரு தாழ்வில்லையே. 72

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கும் மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுக வாசொல்லொ ணாதிந்த ஆனந்தமே. 73

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையந் தாள்தொழ வேண்டும் கொடியஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பகல் அற்ற விடத்தே இருக்கை எளிதல்லவே. 74

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே. 75

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே. 76

செல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேர எண்ணி
மால்வாங்கி ஏங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டும்
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கிப் பூங்கழல் நோக்குநெஞ்சே. 77

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல் ஏற்றங் கொண்டாடுவீர்காள்
போர்கொண்ட காலன் உமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரும் மாளிகையும் பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு வீர்நும் அறிவின்மையே, 78

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்கும்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே. 79

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
தியாகப் பொருப்பைத் திரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே. 80

தாரா கணமெனுந் தாய்மா ரறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பாலன் அரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே. 81

தகட்டிற் சிவந்த கடம்பையும் நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே, 82

தேங்கிய அண்டத்து இமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்கள் எட்டும் வழிவிட்டவே. 83

மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே, 84

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுத மிகஎளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமற் சாதிக்கும் யோகிகளே. 85

வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன் அறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
பாலா யுதக்கொடி யோன்அரு ளாய கவசமுண்டென்
காலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே, 86



குமார சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுகம் ஆறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்கு
எமராசன் விட்ட கடையேடு வந்தினி என்செயுமே. 87

வணங்கித் துதிக்க அறியா மனிதர் உடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொண் டாடப் பிசிதர் தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயு தந்தொட்ட நிர்மலனே. 88

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதனை
நங்காலி விட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியின் இனிநான் முகனுக் கிருவிலங்கே, 89

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே. 90

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேலனைக் கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே. 91

தொண்டர் கண்டண்டி மொண்டுண் டிருக்குஞ் சுத்தஞானமெனுந்
தண்டையம் புண்டரிகந் தருவாய் சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காவலனே. 92

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி ஓசையந்த
விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திருஅரையிற்
கிண்கிணி ஓசை பதினால் உலகமுங் கேட்டதுவே 93

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் றாள்வேட் டிலைசிறு வள்ளை தள்ளித்
துள்ளியகெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்ட நெஞ்சே. 94

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங் கெட்டாலன் றியாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரும் அற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே, 95

தடக்கொற்ற வேள்மயி லேஇடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே, 96

சேலில் திகழ்வயல் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே. 97

கதிதனை ஒன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேன்முருகா
நதிதனை யன்ன பொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே . 89

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தாவிக் குலமயில் வாகன னேதுணை ஏதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம்பு இலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே. 99

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பால்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப்பட்டது விட்டது பாச வினைவிலங்கே. 100

## நூற்பயன்

சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்
யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு
கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும்
யானைக்குங் கந்தநன்னூல்
அலங்கார நூற்றுளொருகவி
தான் கற்றறிந்தவரே.



உ
குகமயம்

# கந்தர் கலி வெண்பா

(சிவபெருமான் சிறப்பு இயல்பு)

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்–தேமேவு 1
நாதமும்நா தாந்தா முடிவும் நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்–ஆதிநடு 2
அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்-வந்த 3
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்-அறிவுக் 4

(சிவபெருமானே பரம்பொருள்)

கணுதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மனுதிகளுக் கெட்டா வடிவாய்த்–தனுதருளின் 5
பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்–எஞ்சாத 6

(சிவபெருமானே அதிகாரி)

பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமு மில்லாக் கதியாகித்-தாரணியில் 7
இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்-முந்தும் 8
கருவின்றி நின்ற கருவா யருளே
உருவின்றி நின்ற வுருவாய்த்–திரிகரணம் 9
ஆகவரு மிச்சை யறிவியற்ற லாலிலய
போகவதி காரப் பொருளாகி–ஏகத் 10

(சிவபெருமான் ஆன்மாக்களுக்கு வினைப்பயனை
நுகரச்செய்தல்)

துருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவாய்—இருண்மலத்துள் 11
மோகமுறும்பல் லுயிர்க்கு முத்தியளித் . தற்குமல
பாகமுற வேகவைக்கண் பாலித்துத்—தேகமுறத் 12

தந்த வருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல் 13
ஆறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும் 14
ஈரிரண்டுதோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பான்
ஆரவந்த நான்குநூ றுயிரத்துள்—தீர்வரிய 15
கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடம்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெந்நிரய 16

( சிவபெருமான் ஆன்மபரிபக்குவ நிலையை
எதிர்நோக்கிக் கருணை புரிதல் )

சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணஞ் சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும் 17
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூலெனத் தெரிந்து நாட்டுவித்து—முன்னூல் 18
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு 19
சாலோக சாமீப சாரூப முப்புசிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாம் 20
சத்திநி பாதந் தருதற் கிருவினையும்
ஒத்துவருங் கால முளவாகிப்—பெத்த 21
மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவா 22

(சிவபெருமான் ஆசாரிய மூர்த்தியாக எழுந்தருளுவார்)

தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக் 23
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றி
குருபரனென் றோர் திருப்பேர்கொண்டு—திருநோக்கால் 24

(சிவபெருமான் ஆன்மாக்களுக்கு திருவருள்
செய்யும் முறை)

ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத்தெட்டு நிலம்
ஏழுமத்து வாக்க ளிருமூன்றும்— பாழாக 25
ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும் 26
அடிஞான த்தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது 27



தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப் - போக்கும் 28
வரவு நினைப்பு மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா வின்பம் - மருவுவித்துக் 29
கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்-மின்னிடதுப் 30
பூத்தபவனப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி-மூத்த 31
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துள்நின்று
ஒருமலத்தார்க் கின்ப முதவிப்-பெருகியெழும் 32

(சிவபெருமான் ஆன்மாக்களை அடிமை கொண்டு
மோட்சத்தைக் கொடுத்தல்)

மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருடனேயிருத்தி
ஆன்றபர முத்தி யடைவித்துத்-தோன்றவரும் 33
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக-ஞானம் 34
திருவுருவா விச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை யலரா-இருநிலமே 35
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்களும்
பின்னமற நின்ற பெருமானே மின்னுருவம் 36

(முருகமூர்த்தியின் சிறப்பு இயல்பு)

தோய்ந்தநவ ரத்நச்சுடர் மணியாற் செய்தபைம்பொன் 37
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்
துண்டமிருமூன் றுநிரை தோன்றப்பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட 38
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பருதி 39
பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும் 40
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள் 41

(முருகமூர்த்தியின் திருமுகங்களின் ஆற்றல்)

வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்—எவ்வுயிர்க்கும் 42
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்—சூழ்வோர் 43

வடிக்கும் பழமறைக ளாகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப் 44
பாச விருடுரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன் 45
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கு முகமதியும்—தாகமுடன் 46
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையும்—கொந்தவிழ்ந்த 47

(முருகமூர்த்தியின் திருக்கரங்களின் ஆற்றல்)

வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம் 48
தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது 49
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமும்—மார்பகத்தில் 50
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கி லொருகரமும்—மொய்த்த 51
சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையும்—தெறுபோர் 52
அதிர்கேட கஞ்சுழற்று மங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்—முதிராத 53

(முருகமூர்த்தியின் அழகுத் தோற்றம்)

கும்ப முலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண்அகன் மார்பும்—பைம்பொற் 54
புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணுங் கச்சை யழகும்—திருவரையும் 55
நாதக் கழலு நகுமணிப் பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்—சோதி 56
இளம்பருதி நூறு யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண் 57
டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வவிளக் கொளியே—ஓதியவைந் 58

(முருகமூர்த்தியின் பழைய வடிவங்கள்)

தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியாயைந்
தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய 59



மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால் 60
ஒத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த 61
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்—பலகோடி 62
அண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்-தொண்டுபடும் 63
ஆவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனிநடத்து மெங்கோவே—மேவ 64
வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தருமட்ட யோகத் தவமே—பருவத் 65

(முருகமூர்த்தியின் தசாங்கம்)

தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்பும்—சுகலளிதப் 66
பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம் 67
எல்லாங் கடந்த விருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த வணிநகரும்—தொல்லுலகில் 68
ஈறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதம் 69
தோய்ந்து களித்தோர் துதிக்கையினுற் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசில 70
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள் 71
ஐந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும் 72
நீக்கமின் றியாடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி யசைத்தருளு மாணையும்—தேக்கமழ்ந்து 73
வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ் 74

(முருகமூர்த்தியின் திருவவதாரம்)

பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப் பூங்கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—ஆங்கொருநாள் 75
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமும்—தந்து 76
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவனம் 77
எங்கும் பரக்க விமையோர்கண் டஞ்சுதலும்

பெருங்குந் தழற்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண் 78
எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு 79
பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற் 80
றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய் - முன்னர் 81
அறுமீன் முலையுண் டழுது விளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற் 82
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவ மாறினையும்—தன்னிரண்டு 83
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப்பேர் புனைந்து
மெய்யாறு மொன்றாக மேவுவித்துச்—செய்ய 84
முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த 85
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி 86

(முருகமூர்த்தியின் திருவிளையாடல்)

மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்று
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள் 87
விருப்பா லளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித் 88
தங்கட் புவன மனைத்து மழித்துலவும்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன் 89
விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா—படைப்போன் 90
அகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தென்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையால் 91
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙனென்றுமுனம்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே—மட்டவிழும் 92
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே—கொன்னெடுவேற் 93
றாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தானே—சீரலைவாய்த் 94
தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக் 95
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனும் 96
சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே—காரவுணன் 97
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ளாற்படையுஞ் சங்கரித்துப்—பானு 98



பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த 99
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன் 100
அங்கமிரு கூறா யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுள் 101
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்து மிளையோனே—மாறிவரு 102
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர் 103
குறைமுடித்து விண்ணோர் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே-மறைமுடிவாம் 104

(முருகமூர்த்தியின் திருமணம்)

சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே—பொய்விரவு 105
காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு 106
கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மை பெறத் 107
தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக்கொடியை மணந்தோனே—உள்ளமுவந் 108

(ஆறுபடை வீடு)

தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க் 109
கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும் 110

(அடியார்கள் வேண்டுவன)

பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி 111
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமுந் தீநீரும் பொருபடையும்—தீதகலா 112
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலும்—அவ்விடத்திற் 113
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்ச மகற்று மயில்வேலும்—கச்சைத் 114
திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா

றருள்விழியும் மாமுகங்க ளாறும்—விரிகிரணம் 115
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்கண் 116
எல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து—பலவிதமாம் 117
ஆசுமுத லாற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை 118
எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமைபாலித்—தொழுக்கமுடன் 119
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத் 120
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய 121
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள். 122

*

திருச்சிற்றம்பலம்

முருகா எனவுனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவர் வியாதியடைந்து நையார்
ஒரு காலமும் துன்பம் எய்தார் பரகதியுற்றிடுவார்
பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே,

ஆறுமுகமுந் தினிதோளீராறுங் கருணை யடித்துணையும்
வீறுமயிலுந் தனிக்கடவுள் வேலுந்துணை யுண்டெமக்
கிங்கே
சீறும்பிணியும் கொடுங்கோளும் தீயவினையுஞ் செறியாவே
நாறும் பகட்டா னதிகார நடவா துலகம் பரவுறுமே.

திருச்சிற்றம்பலம்,



உ
முருகன் துணை

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## நூல்

### நிலமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக

என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடையுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க



செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்

நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யென்ற இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா



பழநிப் பதிவாழ் பாலா குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் செய்தே யிருப்பினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக

சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குபந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகுதிவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றிகந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சன்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.





உ



# சண்முக கவசம்

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளியது

—O—

அண்டமா யவனியாகி யறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகளறு தெய்வமாகி
எண்டிசை போற்ற நின்ற வென்னரு ளீசனான
திண்டிறற் சரவணத்தான் தினமுமென் சிரசைக்காக்க. 1

ஆதியாங் கயிலைச் செல்வ னணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் றானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் றுரிசிலா விழியைக் காக்க
நாதனாங் கார்த்திகேய னாசியை நயந்து காக்க. 2

இருசெவி களையுஞ்செவ்வே ளியல்புடன் காக்கவாயை
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறுகதுப் பையானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரிதன்னைச் சிவசுப்பிரமணியன் காக்க. 3

ஈசனாம் வாகுலேய னெனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவுந் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீரா றாயுதன் காக்க வென்றன்
ஏசிலாமுழங் கைதன்னை யெழிற்குறிஞ்சிக் கோன்காக்க. 4

உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
தறுகணே றிடவே யென்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறங்கையை யயிலோன் காக்க பொறிக்கர விரல்கள்பத்து
பிறங்குமான் மருகன் காக்க பின்முதுகைச் சேய்காக்க, 5

ஊணிறை வயிற்றை மஞ்ஞையூர் தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேசனுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணிகைக்கந்தன் காக்கஅறுமுகன் குதத்தைக் காக்க. 6

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க
அஞ்சக னமோரி ரண்டு மரன்மகன் காக்க காக்க
விஞ்சிடுபொருட்காங்கேயன் விளரடித் தொடையைக்காக்க
செஞ்சரணேசவாசான் றிமுருமுன்றொடையைக் காக்க 7

எரகத் தேவ னென்று ளிருமுழங் காலுங் காக்க
சிறுடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சிறிர குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க, 8

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுரு பழநி நாத பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநாயக விசாகன் தினமுமென் நெஞ்சைக் காக்க. 9

ஒலியெள வுரத்த சத்தத் தொடுவரு பூதப்ரேதம்
பலிகொளிராக்க தப்பேய்பலகணத் தெவையாணாலுங்
கிலிகொள வெனைவேல் காக்க கெடுபரர் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்தரதந்திரம் வருத்திடா தயில்வேல் காக்க.10

ஓங்கிய சீற்றமேகொண் டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகந் தடிபர சீட்டி யாதி
பாங்குடை யாயுதங்கள் பகைவரென் மேலேயோச்சின்
தீங்குசெய்யாம லென்னைத் திருக்கைவேல் காக்க காக்க.11

ஔவிய முள ரூனுண்போ ரசடர்பே யரக்கர் புல்வர்
தெவ்வர்க ளெவரா னாலுந் திடமுட லெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
கவ்வுடைச் சூர சண்டன் கையயில் காக்க காக்க, 12

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோ ணாய்கு ரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனாலேனு நானிடர்ப் பட்டிடாமற்
சடுதியில்வடிவேல் காக்க சானவிமுளைவேல் காக்க, 13

ஙகரமே போற்ற ழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதே ளண்டுக் காலிசெய்யனே றுலப் பல்லி
நகமுடை யோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலா தைவேல் காக்க.14

சலத்துலுய்வன் மீனேறுத ண்டுடைத் திருக்கைமற்றும்
நிலத்துலுஞ்சலத்தி லுந்தானெடுந்துயர் தரற்கேயுள்ள
குலத்தினானன் வருத்தங் கொண்டிடா தவ்வவ்வேலை
பலத்துடனிருந்துகாக்க பாவகிகூர்வேல் காக்க, 15



ஞமலியம் பரியன் கைவே நவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய் கடந்த சூலையாக் கிராண ரோகம்
திமிர்கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ணரோகம்
எமையணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க 16

டமருகத் தடிபோ லைக்குந் தலையிடி கண்டமாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணா திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேகமெல்லாம்
எமையடையாம லேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க.17

இணக்கமில் லாத பித்த வெரிவு மாகரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்டமூலவெண் முளை தீமந்தம்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையுமிந்தப்
பிணிக்குலமெனையாளாமற் பெருஞ் சத்திவடிவேல்காக்க18

தவணமா ரோகம் வாதஞ் சயித்திய மரோச கம்மெய்
சுவறவே செய்யு மூலச் சூடினைப் புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோ யுண்டவா தங்கள் சூலை
எவையுமென்னிடத்தெய் தாமலெம்பிரான் றிணிவேல்காக்க
19

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமைவெண்மை யாகுபஃறொழுநோய் கக்கல்
இமைக்குமுன் னுறுவலிப்போ டெழுபுடைப் பகந்தராதி
இமைப் பொழுதேனு மென்னை யெய்தாமலருள்வேல் காக்க
20

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்க
கல்லினும் வலியநெஞ்சம் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினுங் கரியமேனி யெமபடர் வரினு மென்னை
ஒல்லையிற் றாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க 21

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தினுள்ளும்வேறெந்த விடத்து மென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டிநாதன் வேல் காக்க காக்க.22

யகரமேபோல் சூலேந்து நறும்புயன் வேன்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் றன்கைவே னடுவிற் காக்க
சிகரமின் றேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க. 23

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிறமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன் வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்காமத்தோ னிதலுடைக் கரவேல் காக்க, 24

லகரமே போற்கா ளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் வைவேல்
நிகழெனை நிருதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்வேல் காக்க. 25

வடதிசை தன்னி லீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் றிக்கில் வேதபோ தகன் வேல்காக்க
நடக்கையி லிருக்குஞான்றும் நவில்கையி னிமிர்கையிற் கீழ்க்
கிடக்கையிற் றூங்குஞா ன்றும் கிரிதுளைத் துளவேல்காக்க26

இழந்போ காதவாழ்க்கை யீயுமுத் தையனுர் கைவேல்
வழங்குநல் லூணுண்போதும் மால்விளையாட்டின்போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சடக்கும்போதும்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க.27

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளரறு முகச்சி வன்றுன் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்னெ லோஞ்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகற்கால் சிவகுரு நாதன் காக்க. 28

இறகுடைக் கோழித் தோகைக்கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பினி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப னடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழக னெங்கோன் மாறுது காக்க காக்க. 29

இனமெனத் தொண்டரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந்தன்னிற் சரவணபவனுர் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே. 30

சண்முக கவசம் முற்றிற்று





உ
சிவமயம்

# திருமுருகாற்றுப்படை

ஸ்ரீ நக்கீரதேவர் அருளியது

## 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வான்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள் படப்பொதுளியபராஅரைமரா அத்து

உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்கும் செயிர் தீர்மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

துவர முடித்த துகள் அறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலை கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கில்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதிற்பிணர் மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடுவிறற்களம் பாடித் தோள் பெயரா

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகில் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்; அதாஅன்று.



## 2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடு ஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கிற் கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழமேல் கொண்டு
ஐவேறு உருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப

நகைதாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாள்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாஇல் கொள்கைத் தம் தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே.

மாஇருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்விஓர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள்நெஞ்சமொடுகளம்வேட்டன்றே. ஒரு முகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்ப கட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை, இருகை

ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப, ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல

உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பஆறு ஆக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஒங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலை இயபண்பே: அதா அன்று

## 3. திரு ஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீங்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய் இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர் தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன் உரை கடுக்கும் திதலையர் இன்னகைப்

பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோடொடுங்கிய தூம்பு உடைவால் எயிற்று
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்பு படப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள் அணி நீள்கொடிச் செல்வனும் வெள் ஏறு
வலவயின் உயரிய பலர் புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்



வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்தன்ன செலவினர் வளியிடைத்

தீஎழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்: அதா அன்று.

## 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழா அது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி இளமைநல் லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம்புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்: அதா அன்று.

## 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பிற்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காந்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் இடை இடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்பஉடீஇ

மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண் தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்

தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடிஅணி தோழன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலநேர்பு துகிலினன்

முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்று தோறாடலும் நின்றதன் பண்பே, அதா அன்று.

## 6, பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
ஆண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்



பெருந்தண் கணவீர நறுந்தண்மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆகக்காண்தக

முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ

ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கை சால்பெரும் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுனர்க்கு ஆர்த்தும் இசைபேராள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் எனக்
குறித்தது மொழியா அளவை குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறல் அரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில் சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர் இறால் சிதைய நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரியக் சேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளை செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேண்நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

திருமுருகாற்றுப்படை முற்றிற்று





## ஆறுபடை வீட்டுத் திருப்புகழ் ஆறு

### திருப்பரங்குன்றம்

1. சந்ததம் பந்தத்     தொடராலே
சஞ்சலந் துஞ்சித்     திரியாதே
கந்தனென் றென்றுற்     றுனைநாளும்
கண்டுகொண் டன்புற்     றிடுவேனோ
தந்தியின் கொம்பைப்     புணர்வேலா
சங்கரன் பங்கிற்     சிவைபாலா
செந்திலங் கண்டிக்     கதிர்வேலா
தென்பரங் குன்றிற்     பெருமாளே,

### திருச்செந்தூர்

2. இயலிசையி லுசித வஞ்சிக்     கயர்வாகி
இரவு பகல் மனது சிந்தித்     துழலாதே
உயர் கருணை புரியு மின்பக்     கடல்மூழ்கி
உனையென துளமறியு மன்பைத்     தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத்     தினைகாவல்
வனச குற மகளை வந்தித்     தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற்     பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப்     பெருமாளே.

### பழனி

3, அபகார நிந்தைபட்     டுழலாதே
அறியாத வஞ்சரைக்     குறியாதே
உபதேச மந்திரப்     பொருளாலே
உனைநா னினைந்தருள்     பெறுவேனோ
இபமா முகன் தனக்     கிளையோனே
இமவான் மடந்தையுத்     தமிபாலா
ஜெபமாலை தந்த சற்     குருநாதா
திருவாவினன் குடிப்     பெருமாளே,

### சுவாமிமலை

4, காமியத் தழுந்தி     யிளையாதே
காலர் கைப் படிந்து     மடியாதே
ஓமெழுத்தி லன்பு     மிகவூறி
ஓவியத்தி லந்தம்     அருள்வாயே
தூம மெய்க் கணிந்த     சுகலீலா
சூரனைக் கடிந்த     கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த     மயில்வீரா
ஏரகத் தமர்ந்த     பெருமாளே

## குன்று தோறுடல்

5. அதிருங் கழல் பணிந்து — னடியேனுன்
அபயம் புகுவ தென்று — நிலைகாண
இதயந் தனிலிருந்து — க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க — அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி — நடமாடும்
இறைவன் தனது பங்கி — லுமைபாலா
பதியெங் கிலு மிருந்து — விளையாடிப்
பல குன்றிலு மமர்ந்த — பெருமாளே.

## பழமுதிர் சோலை

6. காரணம தாக வந்து — புவிமீதே
காலனணு காதி சைந்து — கதிகாண
நாரணனும் வேதன் முன்பு — தெரியாத
ஞான நடமே புரிந்து — வருவாயே
ஆரமுத மான தந்தி — மணவாளா
ஆறுமுக மாறிரண்டு — விழியோனே
சூரர்களை மாள வென்ற — கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற — பெருமாளே,

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரெல்லாம்.





## திருமுருகாற்றுப் படையைப் பற்றி
## பிற்றை நாட்சான்றோர் தந்த
## இனிய வெண்பாக்கள் பத்து

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை. 1

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும்குன்றும்
தொளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னமொருகால் எனதிடும்பை குன்றுக்குக்
கொன்ன வில்வேல் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும்—நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செலவேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே. 5

அஞ்சு முகந்தோன்றின் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒரு கைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான் 7

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக்கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப் படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைந்த எல்லாந் தரும். 10

அச்சுப்பதிவு
கோணேஸ்வர அச்சகம், திருக்கோணமலை.